கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

வருடாந்த அறிக்கை

2020

வீடமைப்பின் புத்தம்புதிய பிரவேசம்





17

ஆண்டு நிறைவு

2003 - 2020

நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றல்
மற்றும் சமுதாய துப்பரவேற்பாட்டு அலுவல்கள்
இராஜாங்க அமைச்சு

வீடமைப்பின் புத்தம்புதிய பிரவேசம்

தொடர்ச்சியாக 17 வருடங்களாக பரவிய தனது நம்பகத்தன்மைமிக்க பயணப்பாதையில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டாட்சி இருப்பாட்சியாளர்களிதும் துறையைச்சேர்ந்த ஆதன அபிவிருத்தியாளர்களினதும் மற்றும் சேவைவழங்குகின்ற நிறுவனங்களை உள்ளிட்ட முதலீட்டாளர்களினதும் எதிர்பார்ப்புகளையும் அபிலாஷைகளையும் வெற்றியீட்டச் செய்விப்பதற்கான அரச ஒழுங்குறுத்தல் பொறியமைப்பு என்றவகையில் முதன்மைச் செயற்பொறுப்பில் ஈடுபட்டு வருகின்றது.

நிலைபெறுதகு மானிடக் குடியிருப்பாக்கத்தை மையமாகக்கொண்ட மூலோபாய அணுகுமுறையின் ஊடாக இயங்கிவருகின்ற கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையானது பொது திறைசேரியிடமிருந்து எந்தவிதமான நிதியேற்பாடுகளையும் பெற்றுக்கொள்ளாத உறுதியான நிதிசார் ஒழுகலாறுகொண்டதாக பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது. அதன் மூலமாக அரச தொழில்முயற்சிகளுக்கு முன்மாதிரியான செய்தியொன்றையும் வழங்க இயலுமாயிற்று.

சமுதாயப் பங்கேற்பு முகாமைத்துவ முறையியல்களின் மேம்பாட்டின் மத்தியில் மிகவும் சுதந்திரமானதும் ஆரோக்கியமானதுமான தொடர்மாடி வீடமைப்புக் கலாசாரத்தின் ஊடாக சுற்றாடல் நேயமுள்ள – மனித நேயமுள்ள வாழ்க்கைப்போக்கிற்கு ஒத்துவரக்கூடிய எதிர்காலப் பாதைகளைத் திறந்துவிட்டு, கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டாட்சித்துறையின் முன்னோடி என்றவகையில் தனது தனித்துவமான தேசிய அரும்பணியை நாளைய தினத்திலும் நாட்டுக்கு பொறுப்பு வாய்ந்ததைப்போலவே மனநிறைவுகொண்ட உணர்வுடனேயே வெகுமதியாக அளிக்கின்றது.

17

2003 - 2020

வீடமைப்பின் புத்தம்புதிய பிரவேசம்

> கூட்டாட்சி ஆதனத்துறைக்கு ஒழுங்குறுத்தலை வழங்கி நிதிசார் சவால்களை வென்றெடுத்து வெற்றியை நோக்கி வீறுநடைபோடுவதற்கான ஊக்கமும் நம்பிக்கையும் எம்மிடம் இருக்கின்றது



தலைவரின் செய்தி / 10

> நிறுவனத்தின் உள்ளக நிருவாக முறைமையைப் பலப்படுத்தி பயனுறுதிமிக்க சேவை விருத்தியின் ஊடாக சேவைபெறுனர்களுக்கு மனநிறைவுமிக்க சேவைகளை வழங்குதல் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் ஏகோபித்த நோக்கமாகும்.



பொது முகாமையாளரின் மீளாய்வு / 12

உள்ளடக்கம்

நோக்கும் அரும்பணியும் / 05

இந்த அறிக்கை சம்பந்தமாக

2020 வருடாந்த அறிக்கை / 06

கூட்டாட்சி இறந்தகாலம் - நிகழ்காலம் / 07

கூட்டாட்சி வீடமைப்பின் முக்கிய அடையாளங்கள் / 09

தலைவரின் செய்தி / 10

பொதுமுகாமையாளரின் மீளாய்வு / 12

தாபனம்சார் மொத்தப் பகுப்பாய்வு

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் பணிப்பாளர்சபை / 14

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் தாபனம்சார் முகாமைத்துவம் / 16

நோக்கங்கள் / 17

தத்துவங்கள் / 18

நிதிசார் முன்னேற்றம் / 19

ஊழியர், வாடிக்கையாளர் மற்றும் சமூகம்சார் பொறுப்பு / 20

அலுவலகக் கட்டமைப்பு / 21

நிர்வாக அறிக்கை

கூட்டாட்சி ஆதனக் கருத்திட்டங்களுக்கான அங்கீகாரமும் சான்றிதழ் விநியோகமும் / 22

2020 ஆம் ஆண்டில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனச் சான்றிதழ்கள் / 23

வாடிக்கையாளர் சேவைகள் பிரிவின் செயற்பொறுப்பு / 24

வாடிக்கையாளர் சேவைகள் பிரிவில் கூட்டாட்சி ஆதன முறைப்பாடுகள் சம்பந்தமாக தீர்வு வழங்குகின்ற பொறியமைப்பு / 25

முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு வலுவளித்தல் / 26

2005 - 2020 வரை இலங்கையில் நிர்மாணித்துள்ள அரச மற்றும் தனியார் கூட்டாட்சி ஆதனக் கூறுகள் / 27

கூட்டாட்சி ஆதனங்களின் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் / 28

சட்டப் பிரிவில் முறைப்பாடுகள் சம்பந்தமாக தீர்வு வழங்குகின்ற பொறியமைப்பு / 29

சமூக நற்பணி சேவைகள் / 30

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் / 31

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் ஒழுங்குறுத்தல் இடையீடு / 32

ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட உண்மையான மற்றும் நிகழ்கால ஊழியர் மதிப்பீடு / 33

தாபனம்சார் திட்டம் / 34

2020 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மீளாய்வு அறிக்கை / 35

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் / 39

நிதிக் கூற்றுகள் / 41

பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை / 45

ஏனைய விடயங்கள் / 48

நிதிசார் அறிக்கைகள் / 50

நிதிசார் செயலாற்றுகை / 51

2020 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று / 52

நிதிசார் செயலாற்றுகைகள் கூற்று / 54

குறிப்புகள் / 55

நிதிசார் கூற்றுக்கான குறிப்புகள் / 61

நிதிசார் கூற்றுக்கான அட்டவணைகள் / 67

தேறிய சொத்துக்கள் மாற்றமடைதல் கூற்று / 70

2020.12.31 ஆந் திகதியிலான காசுப் பாய்வுக் கூற்று / 71

பாதீடுசெய்த மற்றும் உண்மையான பெறுமானங்களின் இணக்கப் பதிவேடு / 72

நோக்கு

நாட்டின் வீடமைப்புத் தேவைக்கான தீர்வாக கூட்டாட்சி குடியிருப்புகளை உருவாக்க உதவுதல்.

அரும்பணி

கூட்டாட்சி ஆதனங்களின் குடியிருப்பாளர்களின் நன்மைகள் மற்றும் நலனோம்பலுக்கு ஒத்துவரக்கூடியவாறு நிர்மாணித்தல் மற்றும் இந்த ஆதனங்களை முறையாக நிர்வகிப்பதற்காகவும் முகாமைசெய்வதற்காகவும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபித்து மேற்படி ஆதனங்களை பராமரித்தல் ஆகிய பணிகளை ஒழுங்குறுத்துதல்.



2020 வருடாந்த அறிக்கை

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

பாவனையின் வசதிக்காகவும் கணக்காய்வு மற்றும் கணக்குக்கூற்றுகள் அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுக்கு அமைவாக வெளிப்படைத்தன்மை கொண்டதாக வெளியிடப்படவேண்டும் என்பதற்காகவுமே 2020 இன் வருடாந்த அறிக்கை வீடமைப்பின் புத்தம்புதிய பிரவேசம் என ஆக்கப்பட்டுள்ளது.

2020 வருடாந்த அறிக்கை 2020 ஒகத்து மாதம் அமைச்சரவை அலுவலகம் மூலமாக வெளியிடப்பட்ட வழிகாட்டிக் கோவையைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அதன் 3 (XII) இல் அடங்கியுள்ள பின்வரும் விடயங்கள் 2020 வருடாந்த அறிக்கை மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(அ) ஏற்புடைய கால எல்லைக்கான நிறுவனத்தின் செயலாற்றுகை பற்றிய அறிக்கை

(ஆ) எதிர்காலத்தில் நிறுவனத்தின் செயலாற்றுகையை விருத்தி செய்வதற்காக கடைப்பிடிக்க எதிர்பார்த்துள்ள குறுங்கால மற்றும் மத்தியகால வழிமுறைகள்

(இ) வருடாந்த அறிக்கை சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாக்கள் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை திருத்திக்கொள்வதற்காக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினாலும் அதன் பணிப்பாளர் சபையினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வழிமுறைகள்

(ஈ) அமைச்சரவையின் கவனம் செலுத்தப்படவேண்டிய நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள்,

அத்துடன் பகிரங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களம் மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருடாந்த அறிக்கைகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் கணக்குக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.


அறிக்கையிடல் காலஎல்லை

சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதிசார் அறிக்கையுடன் தொடர்புடைய நிதிசாரா தகவல்களும் அதனோடு தொடர்புடைய ஏனைய அறிக்கையிடல்களும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகும். வெளித்தரப்பினர்களும் தொழிற்பாட்டு முகாமைத்துவமும் உள்ளிட்ட கூட்டிணைவு அறிக்கையிடல் அறிக்கைகள் விடயப்பரப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வருடாந்த அறிக்கையிடல் வட்டமானது 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருடாந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு ஒப்பீட்டுரீதியாகவே உருவாக்கப்பட்டுள்ளது. அதன் நிதிசாரா தகவல்களுக்காக அளவுசார் ரீதியான சீராக்கல் மேற்கொள்ளப்படவில்லை.

அளவுசார்ரீதியான தன்மை

முகாமைத்துவ தொழிற்பாட்டுப் போக்குகள் கூட்டாட்சி ஆதன வீடுகளில் வசிப்பவர்கள், ஆதன அபிவிருத்தியாளர்களின் அவசியப்பாடுகள் மற்றும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் மூலோபாயத் திட்டங்களை கவனத்திற்கொண்டு இந்த கூட்டாண்மை அறிக்கையில் உள்ளடங்கவேண்டிய பொருளடக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது.





இந்த QR குறியீடு மூலமாக அறிக்கையை இணையவழியில் பாவிக்கலாம்.


நிர்மாணிப்பும் வடிவமைப்பும்
முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவு
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை




கூட்டாட்சி

வரலாறு - நிகழ்காலம்

கொழும்பு நகரத்தில் வசித்த சேரிப்புறவாசிகள்





சேரிப்புறவாசிகளுக்காகவும் நகர்சார் குடிபெயர்ந்த மக்களுக்காகவும் நிர்மாணிக்கப்பட்ட தனி வீடமைப்புக்கூறுகளும் மனித உரிமைகளும்

முன்னுரை

மானிட சமூதாயம் பல்வேறு பொருளாதார, சமூகக் காரணங்களின் பேரில் நகரங்களை நோக்கி இடம்பெயர்தல் அதிகரித்தமை காரணமாகவும், சதவீத அடிப்படையில் நகர்சார் சனத்தொகை விருத்தியடைந்தமை பற்றியும் உலகளாவிய மட்டத்தில் இற்றைக்கு பல காலத்திற்கு முன்பிருந்தே பேசப்பட்டு வருகின்றது.

இவ்விதமாக நகர்சார் சனத்தொகை அடர்த்தியானது சமநிலையற்றவகையில் வளர்ச்சியடைந்தமை காரணமாக தோன்றியுள்ள சுற்றாடல் போன்றே சமூகச் சிக்கல்கள் பற்றியும் கூருணர்வுகொண்டதாக இதற்குப் பொருத்தமான தீர்வுகளைக் கண்டறிதல் மீது அதற்கிணங்கவே கவனம் செலுத்தப்படுகின்றது. அது நகர்சார் குடியிருப்புமயமாக்கலின் நிலைபெறுதகு வழியுரிமை மீது தீர்வுக்கட்டமான தாக்கத்தை ஏற்படுத்தவல்ல ஒரு பிரிவு என இனங்காணப்பட்டமையாலேயே நகரப்பகுதிகளில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்புகளை மிகவும் உயர்வான வகையிலும் உயர் உற்பத்தித்திறன் கொண்டதாகவும் அபிவிருத்தி செய்தல் பற்றி கருத்திற்கொள்ளும்போது கூட்டாட்சி ஆதனங்களை முறைப்படி தரநியமங்களுக்கு அமைவாக நிர்மாணித்தல் மற்றும் பேணிவரவேண்டியதன் முக்கியத்துவம் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட்டது,

1982 இன் 45 மற்றும் 2003 இன் 39 ஆகிய இலக்கங்களைக்கொண்ட சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்திற்கிணங்க கூட்டாட்சி ஆதனமொன்று ஒவ்வொரு வீடமைப்புக்கூறும் தனித்தனியாக இருப்பாட்சி செய்யக்கூடிய, உரிமையை வகிக்கக்கூடிய மற்றும் உரிமையை கையுதிர்க்கக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளன. பொது அம்சங்களைக்கொண்டதாக குத்தாக அல்லது கிடையாக பரவிய ஒன்றுடனொன்று இணைந்த ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய கூறுகளைக்கொண்ட கட்டிடம் கூட்டாட்சி ஆதனமென பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. கூட்டாட்சி ஆதனத்திற்காக தற்போது பாவனையில் உள்ள பரவலான சொற்றொடர் மாடி வீடுகளாகும். எனினும் கிடையாகவும் குத்தாகவும் நிர்மாணிக்கப்படுகின்ற மேற்படி வரைவிலக்கத்தினால் விபரிக்கப்படுகின்ற இணைந்த வீடுகளும் கூட்டாட்சி ஆதனங்களாகும்.


இலங்கையில் கூட்டாட்சிக் குடியிருப்பு எண்ணக்கருவின் விரிவாக்கம்

காலனித்துவ யுகத்தின் பின்னர் உருவாகிய சுதந்திர இலங்கையில் சமூக, பொருளாதார மாற்றங்கள் காரணமாக தீவின் மேல் மாகாணத்தை மையமாகக்கொண்ட கைத்தொழில் மற்றும் தொழிற்சந்தை தொடர்ந்தும் விரிவாதலுக்கு இலக்காகியதோடு, அந்த அவசியப்பாடுகளை நிவர்த்திசெய்வதை நோக்கமாகக்கொண்ட கிராமிய மற்றும் பகுதியளவிலான நகர்சார் இடம்பெயர் மக்கள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களையும் சார்ந்ததாக அதிகளவில் குடியமரத் தொடங்கினர்.

அதற்கிணங்க கூட்டாட்சி ஆதனங்கள் பற்றிய இலங்கையின் வரலாற்றினை ஆராய்கையில் 1959 ஆம் ஆண்டில் இலங்கையின் வீடமைப்புச் சிக்கல் சம்பந்தமாக கற்றாராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினாலேயே நகர்சார் குடிசை வீடுகளுக்குப் பதிலாக இணைந்த வீடுகள் பிரதானமான தீர்வாக முன்மொழியப்பட்டது.

மேற்படி குழு சமர்ப்பித்த 1963 இன் xxiii பருவ அறிக்கை இலங்கையின் முதலாவது கொள்கைப் பிரகடனமாக கருதப்படமுடியும்.

> பொது அம்சங்களைக்கொண்டதாக குத்தாக அல்லது கிடையாக பரவிய ஒன்றுடனொன்று இணைந்த ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய கூறுகளைக்கொண்ட கட்டிடம் கூட்டாட்சி ஆதனமென பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது.



இலங்கையில் மாடிவீடுகள் தொடர்பான முதலாவது வீடமைப்புச் சட்டம்

- மிகையான சனத்தொகையைக் கொண்ட வலயங்களுக்காக மாடி வீடுகளை அபிவிருத்தி செய்யவேண்டுமென முன்வைக்கப்பட்ட பரிந்துரை இலங்கையில் கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணித்தல் சம்பந்தமான முதலாவது பரிந்துரையாக அமைந்தது. அக்காலத்தில் நிலவிய குடிசைகளுக்கும் வரிசை வீடுகளுக்கும் பதிலாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான மாடி வீடுகள் அமைக்கப்பட வேண்டுமென்பதும்,
- அதைப்போலவே இவ்விதமாக நிர்மாணிக்கப்படுகின்ற மாடி வீடுகளுக்கான உரிமையைக் கையுதிர்க்கின்ற அவசியப்பாடும், அவ்வாறு செய்தபின்னர் உரிமையாளர்களின் கட்டிடங்கள் சங்கத்தினால் பொது வசதிகளின் நிர்வாகம், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும், அதற்கான சட்டமுறையாக சட்டகமொன்று அறிமுகஞ் செய்யப்படவேண்டியது அவசியமெனவும் மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

பிற்காலத்தில் தேசிய வீடமைப்பு வேலைத்திட்டத்திற்காக முனைப்பான பங்களிப்பினைச்செய்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு, வீடமைப்புத் திட்டமிடல் நிலையம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி அதிகாரசபை போன்ற அரச நிறுவனங்கள் உருவாதல் தொடர்பிலும் இந்த பருவ அறிக்கையின் அவதானிப்புகளும் பரிந்துரைகளும் பெரிதும் உறுதுணையாக அமைந்துள்ளதெனவும் கூறமுடியும்.

அத்துடன் இந்த பரிந்துரைகளின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட வீடமைப்பு நிதியம் ஊடாக தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினால் பல வீடமைப்பு செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் என்றவகையில் டொறிங்டன் வீடமைப்பு செயற்றிட்டம் உருவாக்கப்பட்டமை, நடுத்தர வர்க்த்தினருக்காக அன்டர்சன் தொடர்மாடி வீடமைப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை போன்ற உதாரணங்களை அதன்கீழ் எடுத்தக்காட்ட இயலும்.

1970 தசாப்தத்திற்கு பிற்பட்ட யுகம்

1970 தசாப்தத்திற்குப் பின்னர் அரசாங்க இடையீட்டுடன் கூட்டாட்சி ஆதனங்கள் (இணைந்த வீடமைப்புத் தொகுதிகள்) நிர்மாணிக்கப்படுதல் துரிதப்படுத்தப்பட்டதோடு, மேற்படி இணைந்த வீடமைப்புத் தொகுதிகளின் பதிவுசெய்தல், நிர்வாகம் போன்றவை பற்றி 1970 இன் 12 ஆம் இலக்கமுடைய கூட்டாட்சி ஆதனச் சட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டபோதிலும் அந்த சட்டம் நடைமுறையில் அமுலாகவில்லை. பின்னர் 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் அமுலாக்கப்பட்டமையால் இந்த துறையில் நிலவுகின்ற சிக்கல்களுக்குத் தீர்வு வழங்க எதிர்பார்த்தபோதிலும் குறிப்பாக முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு சம்பந்தமாக குடியிருப்பாளர்களின் பங்கேற்பினை மிகவும் விரிவான மட்டத்தில் பெற்றுக்கொள்ள அவசியமான முறையியல் அந்த சட்டத்திலும் உள்ளடங்கவில்லை. மேற்படி பங்கேற்பு முகாமைத்துவ நோக்கங்களை ஈடேற்றிக்கொள்வதற்காக ஆதனத்தின் பொது அம்சங்களையும் பொதுவசதிகளையும் முகாமை செய்கின்ற பொறுப்பினை ஈடேற்றிக்கொள்ளும் பொறுப்பினை ஈடேற்றிக்கொள்வதற்காக 1982 இன் 45 ஆம் இலக்கமுடைய திருத்தச் சட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டது.

அதன் இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை திருத்தச் சட்டத்திற்கு கூட்டாட்சி மாடி வீடுகளின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புக்காக வீடுகளில் வசிப்பவர்களின் பங்களிப்பினை மிகவும் பரவலானவகையில் பெற்றுக்கொள்கின்ற முறையியல் ஊடாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் எனப்படுகின்ற கட்டமைப்பினை தாபிக்க அவசியமான சட்டமுறையான ஏற்பாடுகள் வழங்கப்பட்டன.

1970/80 தசாப்தமானது இலங்கையின் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தியின் மூலோபாயங்கள் பற்றிய சிக்கல்கள் ஆழமாக கற்றாராயப்பட்ட காலப்பகுதியாகும். 1973 இன் 10 ஆம் இலக்கமுடைய பொது வசதிகள் சபை சட்டம் மூலமாக பொது வசதிகளை பராமரிப்பதற்கான பொது வசதிகள் சபை நிறுவப்பட்டது. 1973 இன் 01 ஆம் இலக்கமுடைய வீட்டு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அனுமதிபெற்ற வீடுகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் அதிகமான வீடுகள் தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டன. அத்துடன் தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் கையளிக்கப்பட்ட வரிசை வீடுகள், தோட்ட வீடுகள் மற்றும் மாடிவீடுகளின் பொது வசதிகளையும் பொது அம்சங்களையும் பராமரித்தலை முகாமைசெய்தலானது பொதுவசதிகள் சபையிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் 1978 இன் 41 ஆம் இலக்கமுடைய நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் மூலமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையும் 1979 இன் 01 ஆம் இலக்கமுடைய சட்டம் மூலமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் தாபிக்கப்பட்டமை இந்த துறையில் தோன்றிய புரட்சிகரமான நடவடிக்கையாக அமைந்தது.

1986 இல் தயாரிக்கப்பட்ட கொழும்பு நகரத் திட்டத்தை வெளியிட்டு நகர்சார் மக்கட்செறிவுக்கு தாக்குப்பிடிக்கவல்ல புதிய கொள்கைச் சட்டகமொன்றை அறிமுகஞ்செய்ய அரசாங்கம் முயற்சி செய்ததோடு, அதன்கீழும் அரசாங்கத்தின் சார்பாக கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிப்பதன் முன்னோடியாக அமைந்தது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையாகும். தனியார்துறை இந்தப் பணிகளில் மிகவும் சொற்பமாகவே தொடர்புகொண்டது.

1970/80 தசாப்தத்தில் கூட்டாட்சி ஆதனங்களின் நிர்மாணிப்புத்துறையின் பிரதான பங்களிப்பு அரசாங்கத்தினால் வகிக்கப்பட்டதோடு, அந்த வீடுகளை பிரதானமாக குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்குகின்ற கொள்கை அமுலாக்கப்பட்டது. அதற்கிணங்க அந்த ஆதனங்களின் பொதுவசதிகளையும் பொது அம்சங்களையும் பராமரித்தலானது குடியமர்ந்துள்ளவர்களின் பொறுப்பாக அமையவில்லை என்பதோடு, அந்த பொறுப்பானது உரிமையை வகிக்கின்ற தரப்பினரான அரசாங்கத்திடம் அல்லது வீடமைப்புத் திணைக்களத்திடமே கையளிக்கப்பட்டது. 1979 இன் 17 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நிறுவப்பட்ட பின்னர் அந்த அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட மேற்சொன்ன ஆதனங்களின் பராமரிப்பையும் திருத்தவேலைகளையும் ஈடேற்றுகின்ற நிறுவனமாக பொது வசதிகள் சபை பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் 1973 இன் 11 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தில் நோக்கமாகக் கொள்ளப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணித்தல் மற்றும் பதிவுசெய்தல், உரிமையைக் கையுதிர்த்தல் தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைவாக செயலாற்றுதல் இடம்பெறவில்லை.

1982 இன் 45 ஆம் இலக்கமுடைய இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்தம்) சட்டம் மூலமாக முகாமைத்துவக் கூட்டுத்தாபன எண்ணக்கரு அறிமுகஞ் செய்யப்பட்டபோதிலும் மேலே கூறப்பட்ட அடிப்படை காரணமாக அது நடைமுறையில் அமுலாக்கப்படவில்லை.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் தாபிதம்.

தனியார் ஆதன அபிவிருத்தியாளர்களால் இலாபமீட்டும் நோக்கத்துடன் கூட்டாட்சி ஆதனங்கள் நிர்மாணிக்கப்பட்டமையால் மேற்படி கூட்டாட்சி ஆதனங்களை ஒழுங்குறுத்துவதற்காக அரச அதிகாரசபையொன்றின் அவசியம் தோன்றியது. கூட்டாட்சி ஆதனங்கள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அதனோடு சம்பந்தப்பட்ட கூட்டாட்சி வரைபடம் மற்றும் வெளிப்படுத்தல்களை பதிவுசெய்வித்தல், அவ்வாறு பதிவுசெய்தலுக்கு முன்னராக அந்த ஆதனத்தின் பொது அம்சங்கள் பற்றிய சான்றிதழை வழங்குதல், பதிவுசெய்யப்பட்ட பின்னர் உருவாகின்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து அலுவல்களையும் ஒழுங்குறுத்துதல், கூட்டாட்சி ஆதனங்களின் பல்வேறு தரப்பினர்களுக்கிடையில் பொது ஆதனங்கள் சம்பந்தமாக தோன்றுகின்ற பிணக்குகளை தீர்த்துவைத்தல், அத்துமீறிய நிர்மாணிப்புகளை அகற்றுதல், ஆதனங்களை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்காக அனைத்து தத்துவங்களையும் கொண்டதாக அமுலாக்குவதற்காக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையை தாபித்து 1973 இன் 10 ஆம் இலக்க பொதுவசதிகள் சபைச் சட்டம் 2003 இன் 24 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டதோடு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை அந்த சட்டத்தின் மூலமாகவே நிறுவப்பட்டது.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் செயற்பொறுப்பு

இலங்கையின் கூட்டாட்சி நிர்மாணிப்புகள் சார்ந்த அண்மைக்கால போக்குகள் பற்றி கவனஞ்செலுத்துகையில் நகர்சார்ந்த மற்றும் அண்டிய பிரதேசங்களில் கூட்டாட்சிக் குடியிருப்புகள் தொடர்பில் முன்னொருபோதும் இருந்திராதவகையில் கேள்வியொன்று தோன்றியுள்ளமை புலனாகின்றது. அதற்கிணங்க அந்த கேள்விக்கு ஒத்துவரத்தக்கதாக மக்களின் வீடமைப்பு அவசியப்பாட்டினை நிறைவுசெய்யும்பொருட்டு அரச மற்றும் தனியார் எனும் இரண்டு பிரதான பிரிவுகளும் கூட்டாக கூட்டாட்சி குடியிருப்புகளை நிர்மாணிப்பதிலான அதிகரித்த நாட்டமொன்று உருவாகி இருக்கின்றது.

இதன்போது நிர்மாணிக்கப்படுகின்ற கூட்டாட்சி ஆதனங்களை 03 கட்டங்களில் பதிவுசெய்வதற்காக அதாவது, தற்காலிக கூட்டாட்சி ஆதனங்கள், பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனங்கள் மற்றும் முழுமையான கூட்டாட்சி ஆதனங்கள் என்றவகையில் வாய்ப்பினை வழங்க 2003 இன் 39 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்தம்) சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

அதைப்போலவே கூட்டாட்சி சான்றிதழ்களை விநியோகிப்பதற்காக பூர்த்திசெய்யவேண்டிய அடிப்படை அவசியப்பாடுகள், அமைந்தொழுகுதல்கள் மற்றும் பிரமாணக் கட்டணங்கள் மாத்திரமன்றி விண்ணப்பப் பத்திரங்கள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கியதாக 2017 இன் 15 ஆந் திகதிய 2016 / 25 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணித்தல் பல்வேறு அரச நிறுவனங்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்படுவதன் ஊடாக முறைசார்ந்த வகையில் ஆதனங்களை கையளிப்பதற்கு அவசியமான தகைமைகளை பூர்த்திசெய்திராமை காரணமாக கணிசமான எண்ணிக்கையுடைய வீடுபெறுனர்களுக்கு அவ்வாதனங்களை கையளிப்பதற்கான இயலுமை கிடைக்காமல் போயிற்று. இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு அரசாங்க அல்லது அரசாங்க முகவர் நிறுவனமொன்றுக்கு சொந்தமான ஒருசில கூட்டாட்சி ஆதனங்களை பதிவுசெய்தல் மற்றும் கையுதிர்ப்பதற்கான வசதிகளை வழங்கவும் அதனோடு தொடர்புபட்ட அல்லது இடைநேர்விளைவான விடயங்களுக்கான எற்பாடுகளை செய்வதற்காகவும் 2018 இன் 23 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சிறப்பேற்பாடுகள் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

இதன்படி கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிப்பவர்களைப்போன்றே மாடி வீடுகளில் வசிப்பவர்களுக்கு மிகவும் உயர்வான வாழ்க்கைத்தரத்தை பெற்றுக்கொடுப்பதை எதிர்பார்த்து இந்த துறையைச்சேர்ந்த அனைத்துப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களின் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் பெற்று கூட்டாட்சித் துறைக்குரிய சட்ட முறைமையை நடப்புத் தேவையாகக்கருதி திருத்தியமைக்க தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அதற்கிணங்க 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை சட்டமும் 1973 ஈன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டமும் திருத்தப்பட உள்ளது.

கூட்டாட்சி வீடமைப்பின் முக்கிய அடையாளங்கள் 1959 - 2020

1959 இலங்கையின் வீடமைப்புச் சிக்கல்கள் சம்பந்தமாக கற்றாராய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்படல்.

1963 இலங்கையின் வீடமைப்புக் கொள்கை சம்பந்தமான முதலாவது கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டமை.

1970 1970 இன் 12 ஆம் இலக்கமுடைய கூட்டாட்சி ஆதனங்கள் சட்டம் மூலமாக கூட்டாட்சி ஆதனம் சம்பந்தமான சட்ட ஏற்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டமை.

1973 1973 இன் 01 ஆம் இலக்க ஆதன உச்சவரம்புச் சட்டத்தினால் மாடி மற்றும் இணைந்த வீடுகளின் கட்டுப்பாட்டுக்கான விரிவான தத்துவங்கள் கையளிக்கப்படுகின்ற வகையில் 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச்சட்டம் நிறுவப்பட்டது.

அதன்மூலமாக 1972 இன் 12 ஆம் இலக்க சட்டம் நீக்கப்பட்டதோடு மாடி வீடமைப்புக் கூறுகளின் உரிமையாளர்களைக் கொண்டமைந்த சங்கம் அல்லது சபை தாபிக்கப்படுவது சட்டமுறையானதெனும் ஏற்பாடு வழங்கப்பட்டது. அத்துடன் மேற்படி ஆதனங்களின் பராமரிப்புக்கான பொது வசதிகள் சபையைத் தாபித்தல் 1973 இன் 10 ஆம் இலக்க சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

1982 1982 இன் 45 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் மூலமாகவே முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் அறிமுகம் செய்யப்பட்டதோடு முகாமைத்துவ கூட்டுத்தாபன முறையை பலப்படுத்துவதற்கான தத்துவங்கள் அந்த சட்டத்தில் அடங்கியுள்ளன.

2003 கூட்டாட்சி ஆதனங்கள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அதனோடு சம்பந்தப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடம் மற்றும் வெளிப்படுத்தல்களை பதிவுசெய்வித்தல், அவ்வாறு பதிவுசெய்தலுக்கு முன்னராக அந்த ஆதனத்தின் பொது அம்சங்கள் பற்றிய சான்றிதழை வழங்குதல், பதிவுசெய்யப்பட்ட பின்னர் உருவாகின்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து அலுவல்களையும் ஒழுங்குறுத்துதல், கூட்டாட்சி ஆதனங்களின் பல்வேறு தரப்பினர்களுக்கிடையில் பொது ஆதனங்கள் சம்பந்தமாக தோன்றுகின்ற பிணக்குகளை தீர்த்துவைத்தல், அத்துமீறிய நிர்மாணிப்புகளை அகற்றுதல், ஆதனங்களை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்காக அனைத்து தத்துவங்களையும் கொண்டதாக அமுலாக்குவதற்காக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையை தாபித்து 1973 இன் 10 ஆம் இலக்க பொதுவசதிகள் சபைச் சட்டம் 2003 இன் 24 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டதோடு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை அந்த சட்டத்தின் மூலமாகவே நிறுவப்பட்டது. மேலும் கூட்டாட்சி ஆதனமொன்று தற்காலிக, பகுதியளவிலான மற்றும் முழுமையான என்றவகையில் 03 சந்தர்ப்பங்களில் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்காக 2003 இன் 39 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்தம்) சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

2017 கூட்டாட்சி சான்றிதழ்களை விநியோகிப்பதற்காக பூர்த்திசெய்யவேண்டிய அடிப்படை அவசியப்பாடுகள், அமைந்தொழுகுதல்கள் மற்றும் பிரமாணக் கட்டணங்கள் மாத்திரமன்றி விண்ணப்பப் பத்திரங்கள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கியதாக 2017 இன் 15 ஆந் திகதிய 2016.'.25 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை வெளியிடப்பட்டது.



தலைவரின் செய்தி

> மாடி வீடுகளில் வசிப்பவர்களின் பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகள் சம்பந்தமான அரச ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் வீடுகளில் வசிப்பவர்களினதும் துறையின் மேம்பாட்டுக்காகவும் 2020 ஆம் ஆண்டில் முக்கியமான கொள்கைரீதியானதும் நிர்வாகரீதியானதுமான பல தீர்மானங்கள் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளன

தொலைநோக்குடன் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகளை திட்டமிடுவதன் பெறுபேறாக கூட்டாட்சி ஆதனத்துறைக்கு புறம்பான கொவிட்-19 பெருந்தொற்று நிலையில்கூட எமது தொழிற்பாட்டு அலுவல்களையும் மூலோபாய செயற்பாடுகளையும் கிரமமாக முன்னெடுத்துச்செல்ல எம்மால் இயலுமானமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

உண்மையிலேயே இந்த காலப்பகுதி எம்மனைவருக்கும் கடினமான முயற்சியாக அமைந்ததோடு, எதிர்வரும் கால எல்லையிலும் இத்தகைய ஒருசில சிரமங்களுடன் பயணிக்க நேரிடுவதால் அது பெரிதும் சவால்நிறைந்த விடயமாக அமையுமென்பதில் சந்தேகம் கிடையாது.

பெருந்தொற்று காரணமாக உலகளாவிய பொருளாதாரத்தில் எற்பட்ட பின்னடைவுக்க இணையானதாக 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம 3.6% ஆல் சுருங்கியது. பொருளாதாரத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் உருப்படியான பொருளாதார அலுவல்களுக்கு அதன் மூலமாக தடைகள் தோன்றியதோடு கூட்டாட்சித்துறையின் நிர்மாணிப்புகளும் கணிசமான அளவில் பின்னடைவுக்கு இலக்காகியது. மேற்சொன்ன கடினமான நிலைமையின் கீழும் 2019 நிதியாண்டுடன் சார்புரீதியாக ளு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் வருமானத்தை 2.6% ஆல் உயர்த்திக்கொள்ளவும் தேறிய இலாபத்தை 81% ஆல் விருத்திசெய்துகொள்ள இயலுமானதாக அமைந்தமையும் தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்புச் செலவுகளை 8மூ ஆல் குறைத்துக்கொள்ள இயலுமானமையும் நாங்கள் பெற்ற வெற்றியாகும்.

கூட்டாட்சி முகாமைத்துவ ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் எமது நீண்டகால நோக்காக அமைவது, "வலிமையான முகாமைத்துவ கூட்டுத்தாபனம் வசதியான வாழ்க்கை முறைக்கான பக்கபலமாகும்." அந்த விடயத்தை மையமாகக்கொண்டு கட்டிவளர்க்கப்பட்டுள்ளதோடு கூட்டாட்சி தொழில்முயற்சிகள் மற்றும் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்தை இலக்காகக்கொண்டு தொடர்ச்சியாக துறையின் மேம்பாட்டுக்காக செயலாற்றக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந்நாட்டில் ஏறக்குறைய கடந்த நான்கு தசாப்தங்களாக இடம்பெற்ற துரித நகர அபிவிருத்தி காரணமாக அதன் பெறுபேறுகளை அனுபவிக்க விரும்பிய கிராமிய மக்கள் கிராமிய நிலத்திலிருந்து நகர்ப்புறங்களை நோக்கி இடம்பெயர்ந்தமையால் நகர்சார் மற்றும் அண்டிய பிரதேசங்களில் வீடுகளுக்கான பாரிய கேள்வி தோன்றியது. அதற்கான எண்ணக்கருவாகத் தோன்றிய மாடி வீடுகளின் கூட்டாட்சி ஆதனங்களை ஒழுங்குறுத்துவதற்காக எமது அதிகாரசபையின் செயற்பொறுப்பு நியதிச்சட்டமுறையான திருத்தங்கள் ஊடாக இடைக்கிடையே விரிவடைந்தது.

முழுஉலகத்தையும் இரையாக்கிக்கொண்ட கொடூரமான பெருந்தொற்று நிலைமையின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட பலவிதமான தடைகளைத் தகர்த்தெறிந்து வெற்றியைநோக்கி வீறுநடை போடுவதற்கான நிலைதளராத திடசங்கற்ப பலத்துடனேயே ஓர் ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை தனது 17 வது அகவையில் காலடி எடுத்து வைக்கின்றது.

நிலைபெறுதகு நெடுநோக்கத்தைக் கொண்டதாக பல வெற்றிகரமாக இலக்குகளை நிறைவேற்றிக்கொள்கின்ற எதிர்பார்ப்புடன் அதிமேதகு சனாதிபதியவர்களின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் பத்து அம்ச கொள்கைகளுக்கு அமைவாக நிலைபெறுதகு சுற்றாடல் எண்ணக்கருவினை ஈடேற்றிக்கொள்கின்ற அபிலாசையுடனேயே 2020 ஆம் ஆண்டைநோக்கி நாங்கள் காலடிஎடுத்து வைத்தோம்.

தேசத்தின் உணவுப் பாதுகாப்பிற்காக அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "நாளைய தினத்திற்காக இன்று பயிரிடுவோம்" பயிர்ச்செய்கைப் போராட்டத்திற்காக கூட்டாட்சி மாடி வீட்டு இருப்பாட்சியாளர்களுக்கான கருத்திட்டமொன்று தொடங்கப்பட்டதோடு அதன் மூலமாக ஐக்கிய நாடுகளின் நிலைபெறுதகு அபிவிருத்தி உபாய மார்க்கம் - 17 இற்கான புகுமுகத்தை வழங்க அதிகாரசபையினால் இயலுமாயிற்று.

மேலும், வீடமைப்புக் கருத்திட்டங்களின் சமுதாயப் பங்கேற்புடன் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்க முடிந்தமை ஊடாக சுற்றாடல் பேணல் மற்றும் GO GREEN எண்ணக்கருவினை அமுலாக்கவும் இயலுமாயிற்று.

சுபிட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக இலங்கைக்கே தனித்துவமானதாக

அமைகின்ற சுற்றாடல் நேயமுள்ளதைப்போன்றே மனிதநேயமுள்ள நிர்மாணக் கைத்தொழில் சார்ந்ததாக சர்வதேசத்தை வெற்றிகொள்ள அவசியமான சுற்றாடலை உருவாக்குதல் மீதான எமது தாபனம்சார் பங்களிப்பினையும் மிகவும் ஒழுங்கமைந்தவகையில் வழங்குதல் தொடர்பிலும் நாங்கள் செயலாற்றி வருகிறோம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

"ஒவ்வொருவருக்கும் ஒரு வீட்டுக்கான தேவை நிலவியபோதிலும் இந்த தேவையை தனித்து நிறைவுசெய்துகொள்ள இயலாதென்பதை நாங்கள் அறிவோம் என்பதோடு, எமது அரசாங்க காலத்தில் வீடமைப்புப் பிரச்சினையால் மிகுந்த சிரமங்களை அனுபவித்துவந்த நகர்சார் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களின் வீடமைப்புத் தேவையை தீர்த்துவைக்கின்ற அதேவேளையில் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை முறையை அறிமுகஞ் செய்வதற்காக நாங்கள் நகர்சார் மற்றும் கிராமிய மக்களின் வீடமைப்புத் தேவையை அவர்களின் வாழ்க்கை மட்டத்திலிருந்து உயர்ந்துசெல்கின்ற வகையில் தீர்த்துவைக்க வேண்டும்." என சுபிட்சித்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க மாடி வீட்டு இருப்பாட்சியாளர்களின் பொது அம்சங்கள் மற்றும் பொதுவசதிகள் சம்பந்தமான அரச ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் வீட்டுவாசிகளினதும் துறையினதும் மேம்பாட்டுக்காக 2020 ஆம் ஆண்டில் முக்கியமான கொள்கைரீதியான மற்றும் நிர்வாகரீதியான பல தீர்மானங்களை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை அறிமுகஞ் செய்தது. அத்துடன் சுபிட்சித்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்வாறு வீடமைப்புடன் பின்னிப்பிணைந்த அரசாங்கத்தின் எதிர்கால கொள்கைசார்ந்த நிலைப்பாடுகளை அவ்வண்ணமே அமுலாக்குவதற்கான வினைத்திறன்மிக்க பொறியமைப்பொன்றினை அமுலாக்க 2021 செயற்பாட்டுத் திட்டம் மூலமாக திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மனித வாழ்க்கைக்கு பொருத்தமற்ற ஆபத்தான மட்டத்தில் நிலவுகின்ற பழிக்கப்பட்ட மாடிவீடுகளை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களையும் முன்மொழிவுகளையும் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 புது வருடத்தை நாங்கள் நலமானதாக அமையுமென்ற எதிர்பார்ப்பு சகிதம் ஆரம்பித்தாலும் அந்த எதிர்பார்ப்பினை சவாலுக்கு உட்படுத்தி கொவிட் - 19 எனும் உலகப் பெருந்தொற்று எதிர்பாராத பல சிக்கலான நிலைமைகளை உருவாக்கியே முழுநாட்டையும் ஆரத்தழுவிக்கொண்டது. அதற்கிணங்க உலகப் பொருளாதாரம் தீவிரமான சீரழிவுக்கு இலக்காகியதோடு உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கும் அதனால் கடுமையான தாக்கம் ஏற்பட்டது.

இந்த நிலைமையின் கீழ் எமது அதிகாரசபைக்கு பாரிய சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டதோடு எமது இலக்கினை நோக்கிப் பயணிக்க சுகாதார விதப்புரையின் பேரில் விதிக்கப்பட்டிருந்த நட்டமாட்ட மட்டுப்பாடுகள் போன்றே கொவிட் - 19 பெருந்தொற்று விரிவடைவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளும் தாக்கத்தை ஏற்படுத்தின.

கடினமான நிலைமைகளின்கீழும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை இந்நாட்டின் பொதுமக்களுக்காக உயர்வான இடையீட்டினைக்காட்டி தேசிய பொறுப்பினைத் தனது கடமையாகக் கருதி கொவிட் - 19 நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக கொவிட் நிதியத்திற்கு 10 மில்லியன் ரூபாவினை கொடையாக வழங்கியது.

எமது அதிகாரசபையின் பிரதான வருமான வழிவகையாக விளங்கிய கூட்டாட்சி சான்றிதழ்களை வழங்குகின்ற செயற்பாங்கிற்கு பாரிய தாக்கம் ஏற்பட்டது. நடமாட்ட மட்டுப்பாடுகள் மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டமையால் ஆதன அபிவிருத்தியாளர்களால் கூட்டாட்சி ஆதனங்கள் நிரமாணிக்கப்படுவது நலிவடைந்தது. இதன் காரணமாக நாங்கள் எதிர்பார்த்த இலக்குகளை நோக்கிச்செல்ல இயலாமல் போயினும் நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கி 2020 ஆம் ஆண்டில் இலாபமீட்டிய ஒருசில நிறுவனங்கள் மத்தியில் இடம்பிடித்தமை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை பெற்ற தலைசிறந்த வெற்றியாகும்.

அத்துடன் அரசாங்கத்தின் வீடமைப்பு வேலைத்திட்டத்தை வெற்றியீட்டச் செய்விப்பதற்காக முனைப்பாக பங்களிக்கின்ற ஏனைய நிறுவனங்களான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்களுடன் மிகுந்த புரிந்துணர்வுடனும் இடைத்தொடர்பு கொண்டதாகவும் செயலாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை நாங்கள் இனங்கண்டுள்ளதோடு, அதனூடாக எமது அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ள விடயப்பரப்பினை மிகவும் வெற்றிகரமாக ஈடேற்றுவதற்கான இயலுமையை விருத்திசெய்துகொள்ளவும் எதிர்பார்க்கிறோம்.

கூட்டாட்சி ஆதனத் துறைக்கான ஒழுங்குறுத்தலை வழங்கி நிதிசார் சவால்களை வென்றெடுத்து வெற்றிப்பாதையை நோக்கி வீறுநடை போடுவதற்கான துணிச்சலும் நம்பிக்கையும் எம்மிடம் இருக்கின்றது. இவ்வாறான சவால்நிறைந்த காலகட்டத்தில் இருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் அறிக்கையையும் உள்ளிட்ட 2020 வருடாந்த அறிக்கையை மகிழ்ச்சியான உணர்வுடனேயே உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

நன்றி

அதிகாரசபையின் 2020 ஆண்டின் செயலாற்றுகைக்காக பங்களிப்புச்செய்த பொதுமுகாமையாளரை உள்ளிட்ட பணியாட்டொகுதியைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களுக்கும், அதிகாரசபையின் அலுவல்களின்பொது ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச மற்றும் நியதிச்சட்டமுறையான சபைகளின் தலைவர்களுக்கும், பணிப்பாளர்சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அதிகாரசபையின் பயணப்பாதையை நிலைபெறுவகையில் அமைத்துக்கொள்வதற்காக அறிவுறுத்தல்களை வழங்கி எம்மை ஊக்குவித்த வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கௌரவ அமைச்சருக்கும் நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றல் மற்றும் சமுதாய துப்பரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அமைச்சு செயலாளர், மேலதிகச் செயலாளர்கள் உள்ளிட்ட பணியாட்டொகுதியினருக்கும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர்களுக்கும் அதிகாரசபையில் பணிகளுக்காக நல்கிய ஒத்துழைப்பிற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டத்தரணி சரண கருணாரத்ன
தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

2019 நிதியாண்டுடன் சார்புரீதியாக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் வருமானத்தை 2.6% ஆல் அதிகரித்துக்கொள்ளவும் இலாபத்தை 81% ஆல் அதிகரித்துக்கொள்ளவும் இயலுமானமையும் தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்புச் செலவினங்களை 8% ஆல் குறைத்துக்கொள்ளவும் இயலுமாயிற்று.

"வலிமையான முகாமைத்துவ கூட்டுத்தாபனம் வசதியான வாழ்க்கை முறைக்கான பக்கபலமாகும்." எனும் தொனிப்பொருளை மையமாகக்கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ள சுட்டாட்சித் தொழில்முயற்சிகள் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் நிர்வாகம், பராமரிப்பு, முகாமைத்துவத்தை இலக்காகக்கொண்டு தொடர்ச்சியாக துறைசார்ந்த மேம்பாட்டுக்காக செயலாற்றுதல்.

கொடூரமான பெருந்தொற்று நிலைமையின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட பலவிதமான தடைகளைத் தகர்த்தெறிந்து வெற்றியைநோக்கி வீறுநடை போடுவதற்கான நிலைதளராத திடசங்கற்ப பலம்

தேசத்தின் உணவுப் பாதுகாப்பிற்காக அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "நாளைய தினத்திற்காக இன்று பயிரிடுவோம்" பயிர்ச்செய்கைப் போராட்டக் கருத்திட்டத்திற்காக கூட்டாட்சி மாடி வீட்டு இருப்பாட்சியாளர்களை பங்கேற்கச் செய்வித்தல்.

மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்க முடிந்தமை ஊடாக சுற்றாடல் பேணல் மற்றும் புழு புசுநுநுமே எண்ணக்கருவினை அமுலாக்கியமை.

மனித வாழ்க்கைக்கு பொருத்தமற்ற ஆபத்தான மட்டத்தில் நிலவுகின்ற பழிக்கப்பட்ட மாடிவீடுகளை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களையும் முன்மொழிவுகளையும் அரசாங்கத்திடம் சமர்ப்பித்தல்.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை இந்நாட்டின் பொதுமக்களுக்காக உயர்வான இடையீட்டினைக்காட்டி தேசிய பொறுப்பினைத் தனது கடமையாகக் கருதி கொவிட் - 19 நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக கொவிட் நிதியத்திற்கு 10 மில்லியன் ரூபாவினை கொடையாக வழங்கியமை.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பினை வழங்கி 2020 ஆம் ஆண்டில் இலாபமீட்டிய ஒருசில நிறுவனங்கள் மத்தியில் இடம்பிடித்தமை.

பொது முகாமையாளரின் மீளாய்வு



> அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைகின்ற நாடுகளில் கூட்டாட்சி ஆதனங்களின் பாவனை பல தசாப்தங்களிலிருந்தே படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. நகர மற்றும் அண்டிய பிரதேசங்களில் மிகையான சனத்தொகை அடர்த்தி காரணமாக காணிப் பற்றாக்குறை, காணி விலையேற்றம் போன்ற காரணங்களால் நிலவுகின்ற வீடமைப்புக் கேள்வியை கூட்டாட்சி எண்ணக்கருவுக்கு மாத்திரமே நிவர்த்திசெய்ய முடியும்

2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையுடன் 2020 வருடாந்த அறிக்கையை உங்களிடம் சமர்ப்பிக்க கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

புகுமுகம்

2020 ஆம் ஆண்டு உலகரீதியாகவும் உள்நாட்டு ரீதியாகவும் பல சவால்களைக் கொண்டமைந்த வருடமாகும். கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு மேற்படி சவால்களிலிருந்து கிடைத்த பக்குவம் காரணமாக கூட்டாட்சித்துறையின் முன்னேற்றத்திற்காக விசேட செயற்பொறுப்பினை ஆற்ற முடிந்தது.

நவீன நாகர்சார் குடியிருப்புமயமாக்கல் பற்றிய விடயங்களை பொழிப்பாக கூறுவதாயின் இந்த விடயப்பரப்பு தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்ற புதிய போக்குகளுடன் பொதுவில் சமூக மற்றும் மானிடத் தேவைகளை நிறைவுசெய்து நாட்டின் பொருளாதார உயிர்மூச்சு தொடர்பாக முன்னோடிப் பங்களிப்பினை காட்டுகின்ற துறையாக அமைகின்றதென்பது முதன்மையாக சுட்டிக்காட்டவேண்டிய விடயமாகும்.

2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலினால் நிர்மாணிப்புகள் மற்றும் நிர்மாணிப்பு முதலீடுகளுக்கான தூண்டுதல்கள் நலிவடைந்தமையால் கூட்டாட்சித்துறையும் பாரிய பின்னடைவு நிலைமையை பதிவுசெய்தது.

அது கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் வருமானப் பிறப்பாக்கத்திற்கான தாக்கமாக அமைந்தபோதிலும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை என்றவகையில் எமது சேவைபெறுனர்களுக்கு மனநிறைவுகொண்ட சேவைகள் பங்களிப்பினை வழங்க இயலுமாயிற்று.

எதிர்பாராதவிதமாக நிறைவேற்று மற்றும் தொழிற்பாட்டுத் திட்டங்களை செயலிழக்கச் செய்வித்து 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய கொவிட் பெருந்தொற்று நிலைமை உருவாகியமையால் முன்கூட்டிய அபிவிருத்தி உபாயமார்க்கங்களையும் முகாமைத்துவ தொழிற்பாடுகளையும் அமுலாக்குதலானது தனியாள் மற்றும் சமூக இடைவெளி காரணமாக ஒருவிதமான பின்னடைவிற்கு இலக்காகியபோதிலும் அதிகாரசபையின் பணியாட்டொகுதியின் பங்களிப்பு காரணமாக மேற்சொன்ன நிலைமையையும் ஓரளவுக்கு தணித்துக்கொள்ள இயலுமாயிற்று.

தொழிற்பாட்டு வலிமை

2020 இறுதிப்பகுதியில் நிலைமை ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டமையால் உபாயமார்க்கரீதியான முயற்சியின் பெறுபேறாக வருமான வளர்ச்சிவேகத்தை 2019 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 2.6% ஆல் விருத்திசெய்துகொள்ள இயலுமாயிற்று.

அதிகாரசபை மூலமாக கூட்டாட்சி சான்றிதழ்களின் விநியோகம், முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் பதிவுசெய்தல் மற்றும் மீண்டும் புதுப்பித்தல் போன்ற வருமானப் பிறப்பாக்க மூலோபாயங்களிலிருந்து 203.72 மில்லியன் ரூபா பிறப்பிக்கப்பட்டது.

வரி செலுத்திய பின்னர் தேறிய இலாபம் 32.6 மில்லியன் ரூபாவாக அமைந்தது. மேற்படி பெறுமானத்தை 2019 ஆம் ஆண்டில் பெற்ற இலாபத்துடன் ஒப்பிடுகையில் 81% வளர்ச்சியாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் எதிர்வுகூறலுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டில் 55% ஆல் பின்னடைவுக்கு இலக்காகிய இந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அந்த நிதியாண்டின் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் உள்நாட்டில் கொவிட் நிலைமை மீண்டும்மீண்டும் தலைதூக்கியமையால் ஆதன அபிவிருத்தித் துறைக்கு தனது இலக்கினை நிறைவுசெய்ய இயலாமல் போனதுடன் சுருங்கிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமானத்திற்கிணங்க மேற்படி பெறுமானங்கள் எமது அதிகாரசபை பெற்றுக்கொண்ட தனித்துவமான வெற்றியாகும்.

நிர்வாகச் செலவுகளை குறைந்த மட்டத்தில் பேணிவருதல் ஊடாக பொதுப்பணிக் கிரயத்தை 2019 ஆம் ஆண்டினைவிட 2020 ஆம் ஆண்டில் 8% ஆல் குறைத்தக்கொள்ள இயலுமாயிற்று.

வலிமையான முகாமைத்துவ கூட்டுத்தாபனம் வசதியான வாழ்க்கை முறையாகும்

அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைகின்ற நாடுகளில் கூட்டாட்சி ஆதனங்களின் பாவனை பலதசாப்தங்களிலிருந்தே படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. நகர மற்றும் அண்டிய பிரதேசங்களில் மிகையான சனத்தொகை அடர்த்தி காரணமாக காணிப் பற்றாக்குறை, காணி விலையேற்றம் போன்ற காரணங்களால் நிலவுகின்ற வீடமைப்புக் கேள்வியை கூட்டாட்சி எண்ணக்கருவுக்கு மாத்திரமே நிவர்த்திசெய்ய முடியும்.

அரச துறையினைப்போன்றே தனியார்துறை மூலமாகவும் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி வீட்டுவாசிகளின் பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகள் சம்பந்தமான அரச ஒழுங்குறுத்தல் நிறுவனமான நாங்கள் இந்த கடினமான காலகட்டத்தில் அவர்களுக்கு பாதுகாவலாக அமைந்தோம். அதற்கிணங்க முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் / முகாமைத்துவ குழுக்கள் மூலமாக 2020 ஆம் ஆண்டில் கிடைத்த 512

முறைப்பாடுகளில் 416 இற்கு சேவைபெறுனர் திருப்தியடைகின்ற விதத்திலான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க இயலுமாயிற்று. மேலும் விசாரணை சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 51 பிணக்குகளில் 32 இடையீட்டுக்கு இலக்காக்கப்பட்டது.

சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு

சுருங்கிய பொருளாதார நிலைமையின்கீழும் 2020 இல் கொவிட் பெருந்தொற்றுக்கு முகங்கொடுப்பதற்காக அரசாங்கத்தினால் ஈடேற்றப்பட்ட தொற்றுநோய்த்தடை நிகழ்ச்சித்திட்டம் உலகின் ஏனைய நாடுகளை விஞ்சியதாக நோய் பரவுதலை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தலைசிறந்த செயற்பாங்காகும். அதன்போது சமூகப் பாதுகாப்பினை தேசிய கடமையாகக் கருதி கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையும் கொவிட் கட்டுப்பாட்டு நிதியத்திற்காக ஒதுக்க வைப்புக்களிலிருந்து 10 மில்லின் ரூபாவினை கொடையாக வழங்கியது.

கூட்டாட்சி ஆதனங்களிகன் பாதுகாப்பு

2020 ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் வருமானப் பிறப்பாக்க அணுகுமுறையைத் துரிதப்படுத்தி ஆதன அபிவிருத்தியாளர்களால் விண்ணப்பிக்கப்பட்ட கூட்டாட்சி சான்றிதழ்களுக்காக பொது அம்சங்களும் பொது வசதிகளும் முறைப்படி உள்ளனவென சான்றுறுதிப்படுத்தப்பட்ட 137 கூட்டாட்சி ஆதனங்கள் மற்றும் தடைநீக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை மூலமாக கொள்வனவாளர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப இயலுமாயிற்று. அதன் மூலமாக ஆதன அபிவிருத்தி துறையை தூண்டுதலளிப்பிற்கு இலக்காக்க இயலுமானதோடு செயலிழந்து காணப்பட்ட ஆதன அபிவிருத்தித் துறையின் வேகத்தை அதிகரிக்கவும் இயலுமாயிற்று.

துரித தீர்வுகள்

அதிகாரசபையிடம் அடிக்கடி அனுப்பிவைக்கப்படுகின்ற கூட்டாட்சி விடயத்துறை சம்பந்தமான பொதுமக்களின் விசாரணைகளுக்காக துரித பிரதிபலிப்பு காட்டுகின்ற மூலோபாயமாக 0112 - 444575 துரித தொலைபேசி இலக்கம் அறிமுகஞ் செய்யப்பட்டது. அதன் மூலமாக சேவைபெறுனர்களுக்கு அலுவலக நேரங்களில் உயர்வான வேவைகள் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

நடப்புத் தேவைகளுக்கான இடவசதி

1973 இன் 10 ஆம் இலக்க பொதுவசதிகள்சபை சட்டம் மற்றும் 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச்சட்டம் நடப்புத் தேவைகளுடன் ஒத்துவரத்தக்கவகையில் திருத்தியமைக்கப்பட்டு சட்டவரைஞர் திணைக்களத்திடம் அனுப்பிவைக்கப்பட்டதோடு அதன் மூலமாக அதிகாரசபைக்கு கூட்டாட்சித் துறையின் பெரும்பாலான நடைமுறைச் சிக்கல்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமையும். அதன் மூலமாக தற்போது வழங்கப்படுகின்ற சேவைகளைப் பார்க்கிலும் விரிவான சேவைகளை வழங்க இயலுமென்பதையும் அறிவிக்க விரும்புகிறேன்.

எதிர்கால நோக்கு

நிறுவனத்தின் உள்ளக நிர்வாக முறைமையைப் பலப்படுத்தி உற்பத்தித்திறன்மிக்க சேவை விருத்தியின் ஊடாக சேவைபெறுனர்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்குதல் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் ஏகோபித்த நோக்கமாகும். அதன்பொருட்டு 2021 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் மற்றும் கூட்டுத்திட்டம் மூலமாக திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் தாபனஞ்சார் நோக்கங்கள் ஊடாக வினைத்திறனும் பயனுறுதியும்கொண்ட திருப்திகமான சேவை எமது சேவைபெறுனர்களுக்கு வழங்கப்படுகின்றது.

கூட்டாட்சி ஆதனங்களை அபிவிருத்தி செய்கையில் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கு 7,11,15 இன் படி சுற்றாடல் நேயமுள்ள இயற்கை நிலைபெறுதகு வலுச்சக்தி தோற்றுவாய்களை பாவித்து மாடிவீடுகளை நிர்மாணித்தல், திண்மக் கழிவுப்பொருட்களும் குப்பைகூள முகாமைத்துவமும், மழைநீர் மீள்சுழற்சியாக்கம் போன்ற சுற்றாடல் நேயமுள்ள பண்புகளை உள்ளடக்கி கூட்டாட்சி ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதன் மூலமாக தரமான மாடிவீட்டு வாழ்க்கைக் கலாசாரத்திற்கான முறையான வழிகாட்டல் மேற்கொள்ளப்படும்.

கூட்டாட்சி ஆதனங்களின் பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்களில் நிலவுகின்ற சிக்கல்களுக்கு தீர்வு வழங்குதல், முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களின் பராமரிப்பு, நிர்வாகம், முகாமைத்துவம் சம்பந்தமாக சிக்கல் தோன்றுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்கான ஆலோசனைகளை வழங்குதல் போன்ற விடயங்களுக்காக கூட்டாட்சி ஆதனங்களின் அடர்த்தி அதிகமாக உள்ள பிரதேசங்களில் பிராந்திய / வலய அலுவலகங்கள் தாபிக்கப்பட்டமை.

அதைப்போலவே தகவல் தொழில்நுட்ப பாவனையுடாக தொழில் தருனர் - தொழில் பெறுனர் ஆகிய இருதரப்பினருக்கும் வினைத்திறன்மிக்க சேவையை பெற்றுக்கொள்ளவும் தாபனஞ்சார் உற்பத்தித்திறனை விருத்திசெய்து கொள்வதற்காகவும் நிர்வாகச் செயற்பாங்கு பலப்படுத்தப்படும். கொள்கைத் தீர்மானம் மற்றும் தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடியவகையிலும் கொள்கை வகுத்தலின்போது கூட்டாட்சிகள் சம்பந்தப்பட்ட தகவல்களை பங்கேற்கச் செய்விக்கக்கூடியவகையிலும் முழு இலங்கையையும் உள்ளடக்கத்தக்க கூட்டாட்சி ஆதனங்கள் பற்றிய தேசிய மதிப்பாய்வொன்றினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

கூட்டாட்சி எண்ணக்கருவானது எதிர்கால வீடமைப்பு அவசியப்பாட்டின் மூலோபாயமாக அமைவதால் இது சம்பந்தமான சட்ட முறைமைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக ஆதன அபிவிருத்தியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள், வீட்டு வாசிகள் கட்புல மற்றும் செவிப்புல ஊடகங்கள் மூலமாக தொடர்ச்சியாக விழிப்புணர்வூட்டப்படுகின்றனர்

நன்றி நவிலல்

கடினமான காலப்பகுதியாக அமைந்தபோதிலும் மேலே நான் குறிப்பிட்ட வெற்றியை அடைய ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது நன்மதிப்பினை தெரிவித்துக்கொள்கிறேன். என்மீது வைத்துள்ள நம்பிக்கை சம்பந்தமாக தலைவருக்கும் பணிப்பாளர்சபைக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களின் பெறுமதிமிக்க வழிகாட்டல்களை பெரிதும் மதிக்கிறேன். அத்துடன் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் அலுவல்களை மேற்கொண்டு வருகையில் தொழிற் சங்கங்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பிற்கும் நன்றிகூற இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்வதோடு அதிகாரசபையின் நிறைவேற்று மற்றும் ஏனைய பணியார்களுக்கும் அவர்களின் சக்தி மற்றும் அர்ப்பணிப்புடன் இந்த சவால்நிறைந்த காலத்தை வெற்றிகொள்ள முடிந்தமை தொடர்பாக திருப்தியடைவதோடு அதற்கான நன்றியை அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும்போது ஆலோசனைகளையும் ஒத்துழைப்பினையும் வழங்கிய கௌரவ பிரதம அமைச்சர் / வீடமைப்புத்துறை அமைச்சருக்கும் நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், குப்பைகூள அகற்றல் மற்றும் சமுதாய துப்பரவேற்பாட்டு இராஜாங்க அமைச்சருக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும், அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், மேலதிக செயலாளர்களுக்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது பணியாளர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக எமது அனைத்து தரப்பினர்களுக்கும் அவர்களின் தாராளமான ஒத்துழைப்பினை வழங்கியமைக்காக எனது இதயபூர்வமான பாராட்டுகளையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி இந்துநில் லியனகே
பொது முகாமையாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

> நவீன நாகர்சார் குடியிருப்புமயமாக்கல் பற்றிய விடயங்களை பொழிப்பாக கூறுவதாயின் இந்த விடயப்பரப்பு தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்ற புதிய போக்குகளுடன் பொதுவில் சமூக மற்றும் மானிடத் தேவைகளை நிறைவுசெய்து நாட்டின் பொருளாதார உயிர்மூச்சு தொடர்பாக முன்னோடிப் பங்களிப்பினை காட்டுகின்ற துறையாக அமைகின்றதென்பது முதன்மையாக சுட்டிக்காட்டவேண்டிய விடயமாகும்.

> அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைகின்ற நாடுகளில் கூட்டாட்சி ஆதனங்களின் பாவனை

> அதன் மூலமாக ஆதன அபிவிருத்தி துறையை தூண்டுதலளிப்பிற்கு இலக்காக்க இயலுமானதோடு செயலிழந்து காணப்பட்ட ஆதன அபிவிருத்தித் துறையின் வேகத்தை அதிகரிக்கவும் இயலுமாயிற்று.



இடமிருந்து வலம்,
01. திரு. என். ஜீ. கே. ரணவீர **02.** திரு. தமித்த குமாரசிங்க **03.** பொறியியலாளர் திரு. திலின எஸ் விஜேதுங்க
04. திருமதி பீ. என் கமகே **05.** திரு. றொஹான் துடாவ **06.** திரு. எம். எம். சீ. கே. கே. மான்னப்பெரும

திரு. எம்.எச்.வீ. ரத்ன குமார
பணிப்பாளர் (வீடமைப்பு)
நகர அபிவிருத்தி அதிகாரசபை
(பணிப்பாளர் நாயகத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்காக)
2020.02.07 தொடக்கம்

திரு. தமித்த குமாரசிங்க
பணிப்பாளர் நாயகம்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
2020.02.07 தொடக்கம்

திருமதி பீ. என் கமகே
மேலதிக பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவுசெலவுத் திணைக்களம்
2020.02.07 தொடக்கம்

திரு. றொஹான் துடாவ
தலைவர்
துடாவ பிரதர்ஸ் தனியார் கம்பெனி
2020.02.07 தொடக்கம்

திரு. எம். எம். சீ. கே. கே. மான்னப்பெரும
நகர ஆணையாளர்
தெகிவல - கல்கிஸ்ஸ மாநகரசபை
2020.12.23 தொடக்கம்

திருமதி டபிள்யு. ரீ.எல். மானெல்
நகர ஆணையாளர்
தெகிவல - கல்கிஸ்ஸ மாநகரசபை
2020.02.27 தொடக்கம் 2020.11.23 வரை

திருமதி ஏ. டீ.எஸ் சதீகா
நகர ஆணையாளர்
கோட்டே மாநகரசபை
2020.02.27 தொடக்கம் 2020.09.22 வரை

சட்டத்தரணி ரோஷனீ திசாநாயக்க
நகர ஆணையாளர்
கொழும்பு மாநகரசபை
2020.02.27 தொடக்கம்

பொறியியலாளர் திரு. றுவினிஸ்
பொது முகாமையார்
தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
2020.02.27 தொடக்கம் 2020.09.22 வரை

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் பணிப்பாளர் சபை



இடமிருந்து வலம்,
07. திரு. எஸ். டீ. தெவரப்பெரும **08.** சட்டத்தரணி திருமதி ரோஷனீ திசாநாயக்க **09.** திரு. லலித் எதிரிசிங்க
10. கலாநிதி திரு. இந்துநில் லியனகே **11.** சட்டத்தரணி திரு. சரண கருணாரத்ன

திரு. எஸ். டீ. தெவரப்பெரும
நகர ஆணையாளர்
மொரட்டுவ மாநகரசபை

2020.02.27 தொடக்கம்

சட்டத்தரணி திரு. சரண கருணாரத்ன
தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை
2020.02.13 தொடக்கம்

கலாநிதி திரு. இந்துநில் லியனகே
பொது முகாமையாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

2020.11.26 தொடக்கம்

திரு. சஞ்சீவ பண்டுகீர்த்தி
நகர ஆணையாளர்
மொரட்டுவ மாநகரசபை

2020.12.23 தொடக்கம் 2020.12.22 வரை

திரு. பி. எல். எம். சத்துரங்க
நகர ஆணையாளர்
கோட்டே மாநகரசபை

2020.12.23 தொடக்கம்

திரு. லலித் எதிரிசிங்க
பதில் பொது முகாமையாளர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

2020.02.27 தொடக்கம்

பொறியலாளர் திரு. திலிண எஸ். விஜேதுங்க
பொதுமுகாமையாளர்
தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

2020.11.23

திரு. ஆர்.கே. ஜயவீர
பொது முகாமையாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

2020.01.01 தொடக்கம் 2020.04.30 வரை

திருமதி மாதவி எஸ். பரணயாப்பா
(பதில்) பொதுமுகாமையாளர் / எதவிப் பணிப்பாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

2020.06.12 தொடக்கம் 2020.11.25 வரை

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் தாபனஞ்சார் முகாமைத்துவம்



அமர்ந்த நிலையில் (இடமிருந்து வலமாக)
திருமதி நயனா பெல்பிற்ற உதவிப் பொதுமுகாமையாளர் (ஒழுங்குறுத்துதல்), செல்வி நிசங்சலா இலேபெரும உதவிப் பொதுமுகாமையாளர் (சட்டம்), திருமதி எஸ்.எச்.ஆர்.பி. ஹேவகே உதவிப் பொதுமுகாமையாளர் (தொழிற்பாடுகள் / பராமரிப்பு), திருமதி ஐ. பி. பி. யூ. ஜயதுங்க பதில் உதவிப் பொதுமுகாமையாளர் (தொழிற்பாடுகள் / பராமரிப்பு)

நின்ற நிலையில் (இடமிருந்து வலமாக)
திரு. சஜீவ சந்தன த சில்வா உதவிப் பொதுமுகாமையாளர் (தொழிற்பாடுகள் / பராமரிப்பு), திரு. மஹேஷ் குணதிலக்க உள்ளக கணக்காய்வாளர், திரு. பி. அமில நிஷாந்த உதவிப் பொதுமுகாமையாளர் (நிதி)

நோக்கங்கள்

அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடுகளின் பராமரிப்புக்காக 1973 இன் 10 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை சட்டத்தினால் பொது வசதிகள் சபை நிறுவப்பட்டது. அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடுகளின் பொது வசதிகளையும் பொது அம்சங்களையும் பராமரிப்பதே அதன் நோக்கமாக அமைந்தது. தனியார் துறையும் இதற்கு இணையானதாக மாடி வீடுகளை நிர்மாணிப்பதை துரிதப்படுத்தியதுடன் நகர்சார், அண்டிய பிரதேசங்களில் வீடமைப்பு பற்றாக்குறைக்கான தீர்வாகவும் நகர்சார் வசதிகளை அனுபவிப்பதற்காக தூண்டுதலளித்தது. அத்துடன் மாடி வீடுகள் விடயப்பரப்பு இந்நாட்டில் விரிவான வகிபாகமொன்றை சித்தரித்ததோடு துறையின் மேம்பாட்டுக்காக பொது வசதிகள் சபையினால் ஈடேற்றப்பட்ட சேவையைப் பார்க்கிலும் விரிவான சேவையினதும் மாடிவீடுகளின் ஒழுங்குறுத்தலுக்குமான அவசியம் தோன்றியது. அதற்கான தீர்வாக 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை திருத்தச் சட்டம் மூலமாக பொதுவசதிகள் சபை கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகாரசபையாக நிறுவப்பட்டது. அதன் மூலமாக அரசாங்க மற்றும் தனியார்துறை கூட்டாட்சி ஆதனங்களின் பராமரிப்பு, நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குறுத்தலுக்காக விரிவான தத்துவங்கள் உரித்தானதோடு கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகார சபையை நிறுவுவதற்கான நோக்கங்கள் பின்வருமாறு அமையும்.



(அ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சியாதன சிறுகூறுகளையும் பொது அம்சங்களையும் பொது வாழ் வசதிகளையும் கட்டுப்படுத்தி, முகாமைசெய்து, பேணி, அத்துடன் நிருவகித்தல் :

(ஆ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் பொது அம்சங்களும் பொது வாழ் வசதிகளும் நல்லநிலையில் முறையாகப் பேணப்படுவதனையும், அத்தகைய ஆதனத்தை நல்ல நிலையிலும் சேவையாற்றத்தகு ஒழுங்கிலும் பேணுவதற்காகப் பருவத்துக்குப் பருவம் பழுதுபார்ப்பு வேலைகள் கொண்டுநடாத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துதலும், அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதறற்கு முகாமைக் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு உதவிபுரிதலும் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனம் அல்லது சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டுநடாத்தவதற்குத் தவறும்பட்சத்தில் அத்தகைய செயற்பாடுகளுடன் நேரடியாக ஈடுபட்டிருத்தலும்:

(இ) அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறுகளை உள்ளடக்கும் எல்லாக் கட்டிடங்களும் தீவிபத்து, உள்நாட்டுக் குழப்பம் அல்லது கலகங்கள் என்பவற்றுக்கெதிராகக் காப்புறுதி செய்துகொள்ளப்பட்டன என்பதை உறுதிப்படுத்துதல் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது சொந்தக்காரர்களால் அவ்வாறு வேண்டிக்கொள்ளப்பட்டால் காப்புறுதிசெய்தல் அல்லது காப்புறுதி செய்துவைத்திருத்தல் அத்துடன் விடயத்துக்கேற்றாற்போல முகாமைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அல்லது சொந்தக்காரர்களிடமிருந்து அத்தகைய கட்டுப்பணத்தை அல்லது கட்டணங்களை அறவிடுதல்:

(ஈ) கூட்டாட்சி ஆதனத்தின் பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதன வரைபடத்துக்கு அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்துக்கு முரணாக அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் அந்தந்தச் சொந்தக்காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் நிர்மாணிக்கப்பட்ட அல்லது கொண்டுநடாத்தப்பட்ட அத்தகைய அதிகாரமளிக்கப்படாத நிர்மாணிப்புகள் எல்லாவற்றையும் அகற்றுதல்:

(உ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைக் கூட்டுத்தாபனங்கள் முறையாகப் பணியாற்றுகின்றனவா என்பதை உறுதிப்படுத்ததலும் அத்தகைய முகாமைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை முகாமைசெய்தலும் நிருவகித்தலும்:

(ஊ) அத்தகைய கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு நீர், சாக்கடை, வடிகால், வாயு, மின்சாரம், குப்பைகூளம் அகற்றுதல், குளிரூட்டல், தொலைபேசி, வானொலி மற்றும் மீளப்பரப்பு சேவைகள் போன்ற சேவைகளை ஏற்பாடுசெய்வதில் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சியாதன சிறுகூறுகளின் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு உதவிபுரிதல்:

(எ) அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறுகளின் சொந்தக்காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதற்கான வீதிகள், அணுகுவழிகள், புற்றரைகள், தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு திறந்த வெளியிடங்கள் போன்ற வசதிகளைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு உதவிபுரிதல் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனங்கள் அத்தகைய வசதிகளைத் தாபித்துப் பேணத் தவறும்பட்சத்தில், அத்தகைய செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுதல்:

(ஏ) அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறுகளின் சொந்தக்காரர்களினால் அல்லது இருப்பாட்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதற்கான வீதிகள், அணுகுவழிகள், புற்றரைகள், தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு திறந்த வெளியிடங்கள் என்பனவற்றின் பராமரிப்பை உள்ளூர் அதிகாரசபைக்கு கைமாற்றுதல்:

(ஐ) முகாமைக் கூட்டுத்தானத்தின் அல்லது அதன் சொந்தக்காரர்களின் அல்லது இருப்பாட்சியாளர்களின் வேண்டுகோளின்பேரில் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்குப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புச் சேவைகளை வழங்குதல்:

(ஒ) பாதிப்புக்குள்ளாவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய நலன்களை பாதுகாப்பதற்கு அவசியமானவிடத்தெல்லாம் தலையிட்டுத் தடுப்பதற்கும் பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன நிர்மாணத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்:

(ஓ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கென மூலதன முதலீட்டுத் திட்டங்கள் உட்பட கூட்டாட்சி ஆதன மீள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும் அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும்:

(ஔ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் அத்தகைய கூட்டாட்சியாதன மீள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலைப் பொறுப்பேற்குமாறு அல்லது கூட்டாட்சியாதன மீள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிறைவேற்றலைப் பொறுப்பேற்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையை அல்லது ஏதேனும் அரசாங்க முகவர் நிலையத்தை அல்லது எவரேனும் தனியார்துறை வீடமைப்பு அபிவிருத்தியாளரை வேண்டிக்கொள்ளுதல்:

(க) எவரேனும் சொந்தக்காரர் அத்தகைய கருத்திட்டத்தைப் பூரணப்படுத்தத் தவறும்பட்சத்தில், பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஏதேனும் கூட்டாட்சியாதனக் கருத்திட்டத்தை கட்டிமுடிக்கப் பொறுப்பேற்றல்:

(ங) அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எதனையும் கொண்டுநடாத்துவதற்காகக் காணியை அபிவிருத்திசெய்தல் அல்லது மீள் அபிவிருத்திசெய்தல்: அத்துடன்

(ச) மேற்படி குறிக்கோள்களுள் எதனையும் அல்லது எல்லாவற்றையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமாகக்கூடியவாறான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் செய்தல்.

தத்துவங்கள்

அரச மற்றும் தனியார் பிரிவின் கூட்டாட்சி ஆதனங்களின் அரச ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் கூட்டாட்சி ஆதன வீட்டுவாசிகளுக்காக பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் சம்பந்தமாக உயர்வான, நம்பிக்கைமிக்க மற்றும் வசதியான மாடிவீட்டு வாழ்க்கை முறையைப் பெற்றுக்கொடுப்பதற்காக 2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள் (திருத்தம்) சட்டம் மூலமாக பரவலான அதிகாரம் கைளிக்கப்பட்டது. இதன்கீழ் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு அவசியமான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவசியமான மதியுரைசார்ந்த மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவல்களுக்கான தலையீடுசெய்வதற்கான இயலுமை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது. அத்துடன் மாடி வீட்டுவாசிகளின் சாதகமான வாழ்க்கைப்போக்கிற்கும் கட்டிடக் கட்டமைப்புக்கு சேதமேற்படுத்தக்கூடிய மட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அத்துமீறிய நிர்மாணிப்புகளை அகற்றுதல், மனிதவாழ்க்கைக்கு பொருத்தமற்ற மற்றும் ஆபத்தான பழிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களை இனங்கண்டு அவற்றுக்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவும் அதன் மூலமாக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2003 இன் 24 ஆம் இலக்க சட்டம் மூலமாக கூட்டாட்சி முகாமத்துவ அதிகாரசபைக்கு சட்டத்தின் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பின்வருமாறு.



(அ) ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல், உரித்தாக்குதல், மானியம் அல்லது கொள்வனவு மூலம் கொள்ளுதல் அல்லது கொடைவகையாக அல்லது வேறுவிதமாகக் பெறுதல், அத்துடன் அத்தகைய ஆதனத்தை வைத்திருத்தல், முகாமைசெய்தல், விற்றல், ஒப்படைத்தல், கொடுத்துமாற்றுதல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறுவகையாக கையுதிர்த்தல்:

(ஆ) உள்ளூரிலாயினுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகளையும் மரணசாதனக் கையளிப்புகளையும் பெறுதல்:

(இ) பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் தேவைப்படுத்தப்படும் பணங்களைக் கடனாகப் பெறல்:

(ஈ) அதிகாரசபையினால் வாடகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணிச் சிறுகூறுக்காக அல்லது கட்டிடங்களுக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தக்காக வாடகை விதித்தல்:

(உ) இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்கள் அல்லது இறுப்பனவுகள் விதித்தல்:

(ஊ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளில் சொந்தக்காரர்களுக்குள்ள அக்கறைகளுக்கு விகிதாசாரமாக அவர்களிடமிருந்து எவையேனும் கட்டுப்பணங்கள் அறவிடுதல்:

(எ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது வசதிகளுக்கு அல்லது பொது அம்சங்களுக்குச் சொந்தக்காரர் உட்பட எவரேனும் ஆளினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்தைச் சீர்செய்வதில் உறப்பட்ட செலவுகளை அவரிடமிருந்து அறவிடுதல்:

(ஏ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் மறுசீரமைப்பு, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு உட்பட எவையேனும் சேவைகளை அதற்கு வழங்குதலும் அதற்கான இறுப்பனவுகளை விதித்தலும்:

(ஐ) கட்டிட நிர்மாண வேலையைப் பொறுப்பேற்றல்:

(ஒ) ஏனைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்கும் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது அம்சங்களுக்கும் வசதிகள் அளிப்பனவாய குழாய்கள், கம்பிகள், வடங்கள், கம்பிவடக் குழாய்கள் என்பவற்றைப் பரிசோதிக்கும், பழுதுபார்க்கும் அல்லது புதுப்பிக்கும் நோக்கத்தக்காக அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறை அல்லது பொதுவசதிகளை அல்லது பொது அம்சங்களைப் பராமரிக்கும், புதுப்பிக்கும், மறுசீரமைக்கும் அல்லது பழுதுபார்க்கும் நோக்கத்துக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களை அகற்றும் அல்லது இடித்தழிக்கும் நோக்கத்துக்காக அல்லது எவையேனும் இயைபான நியதிச்சட்ட தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என நிச்சயப்படுத்தும் நோக்கத்தக்காக அல்லது இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிப்பதில் நியாயமான எல்லா வேளைகளிலும் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குள், ஒன்றில் தாமாக அல்லது அதன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மூலம் நுழைதல்:

(ஓ) பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டிட நிர்மாணத்தின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டு மீளாய்வுசெய்யும் நோக்கத்தக்காக, தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் காணிச் சிறுகூறுக்குள் நியாயமான எல்லா வேளைகளிலும் ஒன்றில் தாமாக அல்லது அதன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மூலம் நுழைதல்:

(ஔ) அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எதனையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக நியாயமானளவு தேவைப்படுத்தப்படும்வாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் மற்றும் அத்தகைய உடன்பாட்டொழுங்குகளைச் செய்தல்:

(க) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கும் சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் இருப்பாட்சியாளருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் கொள்வனைகாரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் ஈடுபெற்றவருக்கும் அல்லது ஈடுபெற்றவருக்கும் உத்தேச கொள்வனவாளருக்கும் அல்லது ஈடுவைத்தவருக்கும் ஈடுபெற்றவருக்கும் இடையேயான பிணக்குகளைத் தீர்த்தல்:

(ங) அதிகாரசபையின் வேலையைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துதலும் அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்:

(ச) அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிப்பதற்கான விதிகளை ஆக்குதல்: அத்துடன

(ஞ) அதிகாரசபையின் அபிப்பிராயப்படி, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்கு அவசியமான எல்லா விடயங்களையும் செய்தல்.

நிதிசார் முன்னேற்றம்



2.6%
வருமானம்

8%
செலவுகள

81%
தேறிய இலாபம்

2020 ஆம் ஆண்டில் அதிகாரசபை 203.72 மில்லியன் ரூபா வருமானத்தை பிறப்பித்தது, 2019 ஆம் ஆண்டின் அதிகாரசபையின் வருமானமான 198.48 மில். ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2.6% வருமான அதிகரிப்பினைக் காட்டுகின்றது. 2019 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்தச் செலவு 172.24 மில். ரூபாவாக அமைந்ததோடு 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தச் செலவு 159.18 மில். ரூபாவாக அமைந்தது. அதன்படி 2019 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தச் செலவினை 8 % ஆல் குறைத்துக்கொள்ள இயலுமாயிற்று. 2020 ஆம் ஆண்டில் வருமான வரி ஒதுக்கப்பட்ட பின்னர் தேறிய இலாபம் 32.96 மில். ரூபாவாக அமைவதோடு 2019 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 81% அதிகரிப்பினைச் சுட்டிக்காட்டுகின்றது.

2020 ஆம் ஆண்டில் பாரியளவிலான ஒரு சில கூட்டாட்சி ஆதனங்களின் நிர்மாணிப்புகளை நிறைவுசெய்து இறுதி கூட்டாட்சி சான்றிதழ் பெறப்பட்டமையால் கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையிலும் இலாபத்தன்மையை பதிவுசெய்ய அதிகாரசபைக்கு இயலுமாயிற்று. மேலும் கூட்டாட்சி ஆதனத் துறையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை வரையறுக்க நேர்ந்தமையால் பொதுப் பணிக்கிரயத்தை கணிசமான மட்டத்திற்கு குறைத்துக்கொள்ள இயலுமாயிற்று.

வசதிநிறைந்த மாடிவீட்டு வாழ்க்கை கலாசாரத்திற்கான கூட்டாட்சி ஆதன முகாமைத்துவம் மற்றும் நிர்வாக வகிபாகம் ஊடாக சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்தோம். அரச வருமானத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்பினை வழங்குவதற்காக ஆதன அபிவிருத்தி, ஒழுங்குறுத்தல் ஊடாக கூட்டாட்சித்துறையின் முன்னணி அரும்பணியை இடையறாமல் ஈடேற்றி வருகின்றது.


வரிக்கு முந்திய இலாபம்
44.53

அரசாங்கத்திற்கு செலுத்திய வரி
11.57

வரிக்குப் பிந்திய இலாபம்
32.96

கூட்டாட்சித் துறையின் ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் கடினமான காலப்பகுதியிலும்கூட ஊழியர்களின், பாவனையாளர்களின், சமூகப் பொறுப்பினை குறைவின்றி ஈடேற்றி தனது செயற்பொறுப்பினை சிறப்பாக ஆற்றியுள்ளது.

இந்த காலகட்டத்தில் மாடிவீடுகளிலும் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாகவும் துறையில் தோன்றிய சிக்கல்களுக்காக சுகாதாரப் பாதுகாப்புமிக்க முறையில்களை கடைப்பிடித்து துரிதமாக தீர்வுகளை வழங்கவும் அதிகாரசபைக்கு இயலுமாயிற்று.











ஊழியர்கள்

கொவிட் 19 அவசர நிலைமை காரணமாக வழமைபோல அலுவலகப் பணிகளை மேற்கொள்வதில் சிரமங்கள் தோன்றியதால் தொடரறா (Online) முறையியல் ஊடாக ஊழியர்களுக்கு வீட்டிலிருந்தே கடமைப் பணிகளை மேற்கொள்ள அவசியமான சுற்றுச்சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

அத்துடன் ஊழியர் நலனோம்பலை நோக்கமாகக்கொண்டு கடந்த புதுவருட காலத்தில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பண்டங்களின் பொதியொன்று, ஊழியர்களின் பிள்ளைகளுக்கு அவசியமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் காகிதாதிகளை கொள்வனவு செய்வதற்கான தனித்துவமான நிதி அன்பளிப்பும் நிறுவனத்தின் நலன்புரிச் சங்கத்தினால் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கடந்த நிதியாண்டில் நிறுவனம் அடைந்திருந்த முன்னேற்றத்தைக் கவனத்திற்கொண்டு ஆண்டிறுதி மிகையூதியம் ஊழியர்களுக்கு வழங்கப்படுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மேலும் கடமைப் பொறுப்பினை சீராகவும் வினைத்திறனுடனும் பேணிவருவதற்காக அலுவலக வளாகம் நவீனமயமாக்கப்பட்டது.

நடமாட்ட மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் ஊழியர்களின் பாதுகாப்பிற்காக சேவைக்கு சமுகமளிக்கின்ற ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

வாடிக்கையாளர்

நிலவிய நிலைமையின் பேரில் தனியாள் இடைவெளி காரணமாக கூட்டாட்சி ஆதனங்களின் மாடிவீட்டுவாசிகளுக்கு, முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்கு, ஆதன உரிமையாளர்களுக்கு பணியாட்டொகுதியினருடன் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியான உறவுகளைப் பேணிவருவது சிரமமானதாக அமைந்தது..

எனினும் தரப்பினர்களுக்கு இயலுமான உச்ச விதத்தில் அலுவலக சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டியைக் கடைப்பிடித்து உயரிய சேவை வழங்கப்பட்டது. அக்காலப்பகுதிக்குள் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவுக்கும் சட்டப் பிரிவுக்கும் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாக கிடைத்த முறைப்பாடுகள், சிக்கல்களைத் தீர்த்துவைத்தல், கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு மதியுரை சேவைகளை வழங்குதலை தனது முதன்மைப் பொறுப்பாகக் கருதி ஈடேற்றப்பட்டது. இதற்காக துரித தொலைபேசி அழைப்பு இலக்கம் 011 – 2444575 அறிமுகஞ் செய்யப்பட்டது.

அத்துடன் நிலவிய நிலைமையின்பேரில் நிர்மாணத்துறை ஒருவிதத்திலான பின்னடைவினை சந்தித்தபோதிலும் ஆதன அபிவிருத்தியாளர்கள் தைரியமிழக்காதவகையில் சேவைகள் வழங்கப்பட்டன.

மேலும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக மாடி வீடுகளுக்காக சமுதாயப் பங்கேற்புடனும் அதிகாரசபையின் இடையீட்டுடனும் அரசாங்கத்தினால் அமுலாக்கப்பட்ட பல்வேறு கருத்திட்டங்களுக்காக பங்களிப்பு கிடைத்தது.

சமூகரீதியான

வலுவான முகாமைத்துவக் கூட்டுத்தாபனமொன்று வசதியான மாடிவீட்டு வாழ்க்கை என்ற தொனிப்பொருளின்கீழ் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் இடையில் தோன்றுகின்ற சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு அவசியமான இடையீடுகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொண்டு மிகவும் சுமுகமான மக்கள் சேவையொன்றை வழங்க இயலுமானதோடு அதற்கு மேலதிகமாக கூட்டாட்சி ஆதனத்துறையில் ஈடுபடுகின்ற தொழில்வாண்மையாளர்கள் கூட்டாட்சியாதன சட்டம் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.

கூட்டாட்சியாதன நிர்மாணிப்பின்போதும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்கையிலும் சிக்கல்களை குறைத்துக்கொள்ளுதல் இதன் நோக்கமாகும்.

அதன் மூலமாக துறைக்கான அவர்களின் பங்களிப்பினை மிகவும் பரவலாக பெற்றுக்கொள்ள இயலுமானதாக அமையும். மேலும் மாடி வீடுகளில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் சீராக பேணிவரப்படுமாயின் அது அந்த மாடிவீட்டுவாசிகளின் பரஸ்பர சுமுகநிலைமைக்கு பாரிய உறுதுணையாக அமையும்.

மேற்சொன்ன காரணங்களால் வீடமைப்புத் திட்டங்களின் நலன்புரிச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், மரண உதவிச் சங்கங்கள் என்பவற்றை தாபித்துக் கொள்ளவும் வசதியானதாக அமைகின்றது. அதன் மூலமாக சமூகரீதியாக சாதகமான ஒற்றுமை நிலவுகின்ற சமூகமொன்று உருவாவதன் ஊடாக மாடிவீட்டு வாழ்க்கையில் சுகமான சூழலொன்று உருவாக்கப்படும்.

அரசாங்கம்


கடந்த நிதியாண்டுக்காக அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியை முறைப்படி உண்ணாட்டு அரசிறைத் திணைக்களத்திற்கு செலுத்த இயலுமானமை மூலமாக கொவிட் -19 தாக்கம் காரணமாக சுருங்கிய உள்நாட்டுப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக பங்களிப்புச்செய்ய அதிகாரசபைக்கு இயலுமாயிற்று.

அத்துடன் அரசாங்கத்தின் தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை பராமரித்தல், நிருவாகம் மற்றும் முகாமைசெய்தலுக்கான முகாமைத்துவக் கூட்டுத்தாபனக் கட்டமைப்பு அறிமுகஞ் செய்யப்பட்டதோடு ஒவ்வொரு மாடி வீடமைப்புத் திட்டத்திலும் மேற்படி முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் இயங்கிவருகின்றன. இதனால் மாடிவீடுகளின் பராமரிப்புக்காக இதற்கு முன்னர் பொது திறைசேரி ஊடாக கணிசமான பணத்தொகை நிதியேற்பாடுகளாக ஒதுக்கப்பட்டது.

இன்றளவில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் ஊடாக பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அரசாங்க நிதிஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. எனவே இது சுழற்சிமுறையில் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு சாதகமான நிலைமையை உருவாக்கி இருக்கின்றது. இதனால் மாடிவீடுகளின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை நாட்டின் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்காக ஈடுபடுத்த அரசாங்கத்திற்கு இயலுமாயிற்று.

மேலும் தேசிய கொவிட் நிதியத்தற்கு 10 மில். ரூபா பணத்தொகையை கொடையாக வழங்கியதன் மூலமாக நிறுவனம் இந்த சிரமமான தருணத்திலும்கூட தனது சமூகப் பொறுப்பினையும் கடமையையும் தவறவிடாமல் செயலாற்றியுள்ளது.

அலுவலகக் கட்டமைப்பு



பொறியியல் பிரிவு

நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கூட்டாட்சியாதனங்களின் ஒழுங்குறுத்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல், கூட்டாட்சியாதன சான்றிதழ்களை வழங்குதல், கூட்டாட்சியாதனங்களில் அமைக்கப்பட்டுள்ள அத்துமீறிய கட்டுமாணங்களை அகற்றுதல், முறைப்பாடுகளுடன் தொடர்புடைய நிலையம்சார் பரீட்சித்தல்களை நடாத்துதல் என்பவை மேற்கொள்ளப்படுகின்றன.

வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு

முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுடன் தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் முகாமைசெய்தல் மற்றும் சிறிய கூறுகளின் உரிமையாளர்களின் சிக்கல்களுக்கு அவசியமேற்படுமிடத்து ஆலோசனைகளை வழங்குல்.

சான்றிதழ்கள் பிரிவு

கூட்டாட்சியாதன நிர்மாணிப்புகள் தொடர்பிலான பொது அம்சங்களையும் பொது வசதிகளையும் பரீட்சித்தப் பார்த்து இவை ஒழுங்குமுறைப்படி உள்ளனவென்பதை சான்றுறுதிப்படுத்தி கூட்டாட்சியாதன சான்றிதழ்களை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மனித வள முகாமைப் பிரிவு / நிருவாகப் பிரிவு

அதிகாரசபையின் பணியாட்டொகுதியை நிருவகிப்பதற்காக அவசியமான அனைத்துப் பணிகளும் நிருவாகப் பிரிவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டப் பிரிவு

கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக இடையீடுசெய்து வருவதோடு, நடப்புத் தேவைகளுக்கிணங்க மேற்கொள்ளப்படவேண்டிய சட்டத் திருத்தங்களையும் பிரமாணங்களையும் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுதல் இப்பிரிவு மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிப் பிரிவு

அதிகாரசபையின் நிதி நிருவாகம், திட்டங்களை வகுத்தல், இலக்குகளை மீளாய்வுசெய்து முகாமைத்துவத்திற்கு தகவல்களையும் அறிக்கைகளையும் வழங்குதல் நிதிப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தகவல் தொழில்நுட்பப் பிரிவு


அதிகாரசபையிள் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய கருமங்கள் இப்பிரிவு மூலமாக ஈடேற்றப்பட்டு வருவதோடு கூட்டாட்சி ஆதனத் துறையின் புதிய போக்குகளை இனங்காணல், விழிப்புணர்வூட்டலுடன் தொடர்புடைய வெளியீடுகளை தயாரித்தல் போன்றவற்றையும் ஈடேற்றி வருகின்றது

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அதிகாரசபையின் அனைத்துப் பிரிவுகளினதும் கணக்காய்வுப் பணிகளை ஈடேற்றி வருகின்றது.

தொழிற்பாடுகள / பராமரிப்புப் பிரிவு

அலுவலக பராமரிப்புப் பணிகள், திருத்த வேலைகள் மற்றும் கூட்டாட்சி ஆதனங்களின் அத்துமீறிய கட்டுமாணங்களை அகற்றுதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



கூட்டாட்சி ஆதனக் கருத்திட்டங்களுக்கான அங்கீகாரமும் சான்றிதழ் விநியோகமும்.

அரச மற்றும் தனியார் துறை மூலமாக நிர்மாணிக்கப்படுகின்ற மாடி வீடுகளின் பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்களின் கட்டுப்பாடு, பராமரிப்பு, நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு மேற்படி ஆதனங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாக உறுதிசெய்து சான்றிழ்கள் விநியோகிக்கப்படுவதோடு நிர்மாணிக்கப்படுகின்ற கூட்டாட்சி ஆதனங்களின் ஒவ்வொரு படிமுறைக்காகவும் சட்டபூர்வமாக ஒவ்வொரு சிறுகூறினதும் உரிமையைக் கைளிக்கின்ற பதிவேடொன்றினை ஆதன அபிவிருத்தியாளர / கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிப்பவர்கள் கூட்டாட்சி சான்றிதழ்களை பெற்றுக்கொண்ட பின்னர் கொள்வனவாளருக்கு விநியோகிப்பதற்கான இயலுமை நிலவுகின்றது. அதாவது, வீடமைப்புத் தொகுதிகளில் ஒன்றுக்கொன்று இணைந்த வீடுகள் அமைந்துள்ளதோடு அந்த வீடுகளுக்காக தனித்தனியாக செயலாற்றுவதற்காகவும் உரிமைகளை கட்டிக்காட்டுவதற்காகவும் வீடமைப்புத் தொகுதியின் ஒவ்வொரு மாடியிலும் அமைந்துள்ள வீடுகளுக்காக அதன் எல்லைகளைக் காட்டுகின்ற வரைபடங்கள் தயாரிக்கப்படுவதோடு அந்த வரைபடம் கூட்டாட்சி வரைபடம் என அழைக்கப்படுகின்றது. அதற்கிணங்க கூட்டாட்சி வரைபடம் கூட்டாட்சியாதன முகாமைத்துவ அதிகாரசபை மூலமாக சான்றுறுதிப்படுத்தி கொடுத்தபின்னர் வெளிப்படுத்தல் உறுதி காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்படமுடியும். அத்துடன் தற்காலிக பகுதிகள் தவிர்ந்த கூட்டாட்சிக் கட்டிடத்தின் எஞ்சிய சிறுகூறுகளுக்கான உறுதிகளை வழங்குவதற்கான இயலுமையும் நிலவுகின்றது.

அரச பிரிவு மூலமாகவும் தனியார் பிரிவு மூலமாகவும் நிர்மாணிக்கப்படுகின்ற கூட்டாட்சி ஆதனங்களின் பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகள் முறைப்படியும் போதியளவிலும் நிலவுகின்றனவா என்பதை பரீட்சித்துப் பார்த்து கூட்டாட்சியாதன சான்றிதழ் 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் திருத்தச் சட்டம் மூலமாக தாபிக்கப்பட்ட ஒழுங்குறுத்தல் அதிகாரசபையான கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகாரசபையினால் வழங்கப்படுகின்றது. மேலும் இந்த கூட்டாட்சியாதன சான்றிதழ்களை விநியோகிக்கையில் 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க செயலாற்றப்படுவதோடு இதன்போது வீடமைப்பு சிறுகூறுகளின் உரிமையாளர்களுக்கு மேற்படி ஆதனங்களின் பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகள் பற்றிய உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ளவும் வாயப்பு வழங்கப்பட்டுள்ளது.


மேலும் இந்த சான்றிதழ் வருமானம் அதிகாரசபையின் பிரதான வருமான வழிவகையாகவும் அமைகின்றது. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2020.12.31 வரை அதிகாரசபையினால் 1,301 சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் 217 சான்றிதழ்கள் இலக்காகக் கொள்ளப்பட்டதோடு ஆண்டிறுதியளவில் முன்னேற்றம் 62 ஆக அமைந்தது.

2005-2020
விநியோகித்த சான்றிதழ்கள்
1301


2017 – 2020 வரையான காலப்பகுதிக்குள் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கூட்டாட்சியாதன சான்றிதழ்களின் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள்

		வருடாந்த இலக்கு	முன்னேற்றம்
2017	நிதிசார் (ரூ.மில்.)	356.21	224.54
	பௌதீக	105	102
2018	நிதிசார் (ரூ.மில்.)	424.39	304.0
	பௌதீக	171	111
2019	நிதிசார் (ரூ.மில்.)	369.73	154.25
	பௌதீக	102	176
2020	நிதிசார் (ரூ.மில்.)	171.58	168.16
	பௌதீக	217	62

கூட்டாட்சியாதன சான்றிதழ் விநியோகத்தின் இலக்குகளும் முன்னேற்றமும்



கூட்டாட்சியாதன சான்றிதழ் விநியோகத்தின் இலக்குகளும் முன்னேற்றமும்



கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டில் இலக்குகளை அடைய இயலாமல்போயிற்று.

2020 ஆம் ஆண்டில் கூட்டாட்சியாதன சன்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மத்தியில் இசைவுச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்படாமையாலும் வேறு குறைபாடுகளினாலும் அவ்வாண்டில் சான்றீழ்கள் வழங்கப்படாத கூட்டாட்சி ஆதனங்களின் எண்ணிக்கை 16 ஆகும்.

2014 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிப்பதற்காக முன்வந்தமை காரணமாக கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணித்தல் சம்பந்தமான பதிய போக்கு உருவாகிற்று.

அத்துடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தோட்ட இருப்பாட்சியாளர்களை குடியமர்த்துவதற்காக கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணித்தல் மற்றும் அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டத்தின் கீழ் 500,000 வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் மூலமாகவும் கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிப்பதிலான அதிகரித்த போக்கு உருவாகியுள்ளது.

மேலும் தனியார் துறையில் நிறைவுசெய்யப்பட்ட கட்டிடங்களின் ஒரு தொகைக்கு இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள இயலாமல் போனமையால் இவ்வதிகாரசபையின் சான்றிதழுக்காக விண்ணப்பிக்க இயலாமல் போயுள்ளது.

இந்த சிக்கலைத் தீர்ப்பதற்காக அதிகாரசபையானது கூட்டாட்சியாதனத்துறையின் முன்னோடி என்றவகையில் 2018 இன் 23 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியமை காரணமாக 1999.12.31 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு ஆணையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, சுனாமி மீளக்குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் கட்டியெழுப்பப்பட்டுள்ள கூட்டாட்சி ஆதனங்களுக்காக தளர்வான முறையியலொன்றைக் கடைப்பிடித்து கூட்டாட்சி ஆதனங்களை பதிவுசெய்வதற்கும் உரிமையைக் கையுதிர்ப்பதற்குமான இயலுமை கிடைத்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை மூலமாக விநியோகிக்கப்பட்ட கூட்டாட்சியாதன சான்றிதழ்கள்

PPC - 75

பூர்வாங்க தடையொழிப்புச் சான்றிதழ்கள்

Preliminary Planning Clearance

பூர்வாங்க தடையொழிப்புச் சான்றிதழ்கள


கூட்டாட்சி ஆதனமொன்றை நிர்மாணிப்பதற்காக கட்டிட விண்ணப்பப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க முன்னர் உத்தேச காணியை பரிசோதித்துப் பார்த்து கட்டிடத் திட்டத்தை தயாரிக்கின்ற வேளையில் கூட்டாட்சியாதனச் சட்டத்துடன் தொடர்புடைய பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகளை கட்டிடத் திட்டத்தில் உள்ளடக்கவும் மேற்படி ஆதனங்களை நிர்மாணிக்கையில் நிர்மாணிப்புகள் நிறைவடையும்வரை கடைப்பிடிக்கவேண்டிய விடயங்கள் பற்றிய வழிகாட்டலொன்றாக பூர்வாங்க தடையொழிப்புக் கடிதம் விநியோகிக்கப்படும்.

அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டில் நிர்மாணிக்க உத்தேசித்துள்ள 75 கூட்டாட்சி ஆதனங்களுக்காக பூர்வாங்க தடையொழிப்புடன் தொடர்புடைய தடையொழிப்புக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த தடையொழிப்பு அறிவுறுத்தல்கள் ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு நிர்மாணிப்பு அலுவல்களின்போது வழிகாட்டலை வழங்குகின்றன.

கூட்டாட்சியாதன சான்றிதழ்கள


2020 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட ஒட்டுமொத்த கூட்டாட்சியாதன சான்றிதழ்களின்

முழுமையான / தற்காலிக / பகுதியளவிலான கூட்டாட்சியாதன சான்றிதழ்களின் எண்ணிக்கை




முழுமையான கூட்டாட்சியாதன சான்றிதழ்

முழுமையான கூட்டாட்சியாதன சான்றிதழ் கூட்டாட்சி ஆதனமொன்று நிர்மாணிக்கப்பட்டு நிறைவுசெய்தபின்னர் பெறப்படல் வேண்டும். இதனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அக்கட்டிடம் அத்துமீறிய நிர்மாணிப்புகளின்றி கட்டிடத் திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.



சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சரியாக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதிகாரசபை மூலமாக அறவிடப்படுகின்ற செய்முறையாக்கல் கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் மேற்படி ஆதனத்துடன் தொடர்புடைய கடிதக்கோப்புக்காக சேவை வழங்குல் தொடங்கப்படும். வெளிக்களத்தில் ஏதேனும் மாற்றம் அல்லது கூட்டாட்சி வரைபடத்தில் ஏதேனும் வழு இல்லையாயின் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். அதன் பின்னர் வெளிப்படுத்தல் உறுதியொன்றினை சட்டத்தரணியொருவரைக்கொண்டு தயாரித்துக்கொண்ட பின்னர் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்தலை மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு கொள்வனவாளருக்காகவும் உறுதியை விநியோகிக்க இயலுமை கிடைக்கும்.



தற்காலிக கூட்டாட்சியாதன சான்றிதழ்

கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிக்கின்ற அனைவரும் நிர்மாணிப்பினைத் தொடங்குகின்ற ஆரம்பத் தறுவாயில் இந்த தற்காலிக கூட்டாட்சி ஆதனச் சான்றிதழுக்காக விண்ணப்பிக்கலாம். இது ஆதன அபிவிருத்திக் கம்பெனிக்கு வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ளல் போன்றே மேற்படி ஆதனத்தின் வீடுகளை விற்பனை செய்தலுடன் தொடர்புடையதாக கொள்வனவாளர்களுக்கு கடன்வசதிகளைப் பெற்றுக்கொள்ளவும் உதவுவதாக அமையும்.




இந்த சான்றிதழை விநியோகிக்கையில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் தற்காலிக கூட்டாட்சியாதன வரைபடமொன்று அங்கீகரிக்கப்படுவதோடு அது பொதுமுகாமையாளரின் கையொப்பத்துடன் விநியோகிக்கப்படுகின்ற பிரதான சட்டபூர்வ ஆவணமாகும். கூட்டாட்சி ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களுக்காக தயாரிக்கப்படுகின்ற அறுதியுறுதியை மேற்படி தற்காலிக கூட்டாட்சியாதன வரைபடத்திற்கிணங்க தயாரித்துக்கொள்ள முடியும். அத்துடன் அதனோடு தொடர்புடைய வெளிப்படுத்தல் உறுதியை காணிப் பதிவகத்தில் பதிவுசெய்துகொள்ளவும் இருப்பிடக்கூறுகள் (இணைந்த வீடுகள்) சட்டம் மூலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



பகுதியளவிலான கூட்டாட்சியாதன சான்றிதழ்

பகுதியளவிலான கூட்டாட்சியாதன சான்றிதழ் என்பது உத்தேச கூட்டாட்சியாதனத்தின் ஒரு பகுதியை நிறைவுசெய்து எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்வதற்கான எஞ்சவைக்கின்ற தருணமொன்றில் மேற்படி நிறைவுசெய்த பகுதிக்காக இசைவுச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளவிடத்து விண்ணப்பிக்கக்கூடிய சான்றிதழாகும். இது ஒரு பரந்த வீடமைப்புத் திட்டமாகவோ கோபுரங்களாகவோ (Tower) உள்ளவிடத்து அல்லது 02 அல்லது 03 வீடுகள் போன்ற சிறிய தருணமொன்றுக்காக



பிரயோகிக்கப்படலாம். அதன்பொருட்டு இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினல் பதிவுசெய்துள்ள கட்டிட சேவைகள் பொறியியலாளர் ஒருவரிடமிருந்து சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த சான்றிதழை பெற்றுக்கொள்ளும்போது முக்கியமானதாக அமைவது யாதெனில் அமைத்து நிறைவுசெய்துள்ள பகுதிக்காக உரித்துறுதியை வழங்க இயலுவதாகும்.

வாடிக்கையாளர் பிரிவின் செயற்பொறுப்பு

கூட்டாட்சி ஆதனமொன்றின் பொது அம்சங்களை பராமரித்தல் சிறுகூறுகளின் உரிமையாளர்களால் தாபிக்கப்படுகின்ற சங்கங்கள் அல்லது சபைகள் மூலமாக மேற்கொள்ளப்படல் வேண்டுமென 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 16 வது பிரிவில் காட்டப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனமொன்றின் அனைத்து உரிமையாளர்களாலும் பொது அம்சங்களின் கட்டுப்பாடு, முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் நிருவாகம் செய்தலுக்காக அவர்களின் சங்கங்கள் அல்லது சபைகளை நிறுவிக்கொள்ளல் சட்டபூர்வமானதென்பது குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் மேற்படி பணி தொடர்பில் நடைமுறைச் சிக்கல்களைப்போன்றே கூட்டாட்சி ஆதனமொன்றின் முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் நிருவாகத்திற்காக அச்சட்டத்தின் ஏற்பாடுகள் போதுமானதாக அமையாமையால் அதனைப் பார்க்கிலும் விரிவான தத்துவங்களைக்கொண்ட பொறியமைப்பொன்றின் அவசியப்பாடு தோன்றியது.

அதற்கிணங்க அதற்கான தீர்வாக 1982 இன் 45 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தம்) சட்டத்தின் 20 வது பிரிவு ஊடாக கூட்டாட்சி ஆதனமொன்றின் பொது அம்சங்களினதும் பொது வசதிகளினதும் கட்டப்பாடு, முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பினை முறைசார்ந்தவகையில் பேணிவருவதற்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் எனும் சட்டபூர்வமான கட்டமைப்பு அறிமுகஞ்செய்யப்பட்டது.

மாடி வீடுகளில் இப்பாட்சி செய்கின்ற அரசாங்க மற்றும் தனியார் துறையின் பெரும்பாலான மாடிவீட்டுவாசிகள் எமது நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவில் பதிவுசெய்துகொண்டு முனைப்பான முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை நிறுவி அந்த பொறியமைப்பு ஊடாக தமது மாடிவீடுகளின் எதிர்கால நல்வழியுரிமைக்காக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அதற்கிணங்க இந்த அனைத்து கூட்டாட்சியாதன முகாமைத்துவக் கூட்டுத் தாபனங்களினதும் அதிகாரம்பெற்ற பதவியினர் குழாம் ஆண்டுக்கொருதடவை மேற்படி கூட்டாட்சியாதனங்களின் வீடு பெறுனர்களான அனைத்து மாடிவீட்டுவாசிகளினதும் பங்கேற்புடன் நடாத்தப்படுகின்ற மகாசபைக் கூட்டத்தின்போது தெரிவுசெய்யப்படுவர். அது முகாமைத்துவக் கூட்டுத்தாபனமொன்று தாபிக்கப்படுதல் தொடர்பில் வலுவில்உள்ள அடிப்படைச் சட்டபூர்வ நிபந்தனையொன்றாகும். அவ்விதமாக நிறுவப்படுகின்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை முறைப்படி கிரமமாகவும் சட்டபூர்வமாகவும் பேணிவரும்பொருட்டு முக்கியமானதாக அமைகின்ற வழிகாட்டல்கள், மதியுரைகள் மற்றும் நிருவாகரீதியான ஒத்துழைப்பினை வழங்குது கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு மூலமாகவே ஆகும்.

அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்காகவும் தனித்தனியான கோப்பு பேணிவரப்படுவதோடு மேற்படி முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் ஆண்டறிக்கைகளும் முறைப்பாடுகளும் மேற்படி கோப்பில் அடங்கும். மேலும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்களை பதிவுசெய்தல், வருடாந்தப் பதிவினைப் புதுப்பித்தல் மற்றும் அதற்கான கட்டணங்களை அறவிடுதலும் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவின் பொறுப்பாகும்.

பொது அம்சங்களுக்கான சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுவதற்காக ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் இணைப்பாக்கம் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதோடு கூட்டாட்சி ஆதனங்களுடன் தொடர்புடையதாக அரசாங்கம் / நியதிச்சட்டமுறைான அதிகாரசபை / உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் / அறிவித்தல்கள் / பணிப்புரைகள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டுதலும் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் எமது வாடிக்கையாளர் சேவைகள் பிரிவில் பதிவுசெய்துள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாக கிடைத்துள்ள இருப்பாட்சியார்களின் முறைப்பாடுகளையும் சிக்கல்களையும் தீர்ப்பதற்காக இடையீடு செய்தலும் எமது வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற மற்றுமொரு பணியாகும். இதன்போது எவரேனுமொரு வீட்டுவாசியால் செய்யப்படுகின்ற முறைப்பாட்டின்போது முதலில் அந்த முறைப்பாட்டின் தன்மையை இனங்கண்டு அதன் பின்னர் அச்சிக்கலைத் தீர்த்துவைப்பதற்காக அதனோடு தொடர்புடையதாக இயங்கிவருகின்ற ஏனைய நிறுவனம்சார் பிரிவுகளுக்கு மேற்படி சிக்கல் ஆற்றுப்படுத்தப்படும். உதாரணமாக எடுத்துக்கொண்டால் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவுக்கு கிடைக்கின்ற முறைப்பாடொன்று அதனோடு தொடர்படைய அடுத்தகட்ட படிமுறைக்காக பொறியலாளர் பிரிவுக்கா, சட்டப் பிரிவுக்கா அல்லது கணக்காய்வுப் பிரிவுக்கா அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென்பது அந்த முறைப்பாட்டின்படியே தீர்மானிக்கப்படும். எமக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் மத்தியில் பெரும்பாலானவை அத்துமீறிய கட்டுமாணங்கள், நீர்க் கசிவு ஏற்படுதல், ஒலி மாசுபாடு, செல்லப் பிராணிகளை வளர்த்தல், பொது அம்சங்களுக்கு இடையூறு விளைவித்தல், அங்கத்துவ அல்லது பராமரிப்புக் கட்டணங்களை செலுத்தாமை, இருப்பூர்திவெளியில் வாகனங்களை நிறுத்திவைத்தல் போன்ற பிரச்சினைகள் தொடர்பானவையாக முன்வைக்கப்படுகின்றன. சட்டப்பிரிவினால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளுக்கான சாட்சியளித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துமீறிய நிர்மாணிப்பு சம்பந்தமாக எவரேனுமாள் முறைப்பாட்டினை எமது அதிகாரசபைக்கு சமர்ப்பித்த பின்னர் அதனை பொறியியலாளர் பிரிவுக்கும் முகாமைத்துவக் கூட்டுத்தானமொன்றின் நிதிசார் சிக்கலொன்று சம்பந்தமானதெனில் அதனை கணக்காய்வுப் பிரிவுக்கும் சட்ட விடயமொன்று சம்பந்தமானதெனில் சட்டப்பிரிவுக்கும் அதன் உள்ளடக்கத்தின் இயல்புகள் கருத்திற்கொள்ளப்பட்டே ஆற்றுப்படுத்தப்படும். அடுத்த படிமுறையில் அந்த முறைப்பாட்டுக்காக நிலையம்சார் பரீட்சிப்பு தேவையெனில் எமது பொறியியலாளர் பிரிவின் குழுவொன்று வருகைதந்து மேற்படி முறைப்பாட்டுடன் தொடர்புடைய விடயங்களை விசாரித்தறிந்து அதற்குப் பொருத்தமான பரிகாரங்களை முன்மொழிந்து சம்பந்தப்பட்ட வலயத்திற்குப் பொறுப்பான உதவி ஆணையாளரிடம் ஆற்றுப்படுத்தம். மேற்படி விதப்புரைகள் அடங்கிய அறிக்கைக்கிணங்க வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு தனது இறுதி தீர்மானத்தை முறைப்பாட்டுத் தரப்பினருக்கு அறிவிக்கும்.

இதற்கு மேலதிகமாக அத்துமிறியவகையில் அடிப்படை கூட்டாட்சி கட்டிடத்தின் கட்டமைப்பினை மாற்றியமைத்தல், அபிவிருத்தியாளர் முறைப்படி ஆதனங்களை நிர்மாணிக்காமை காரணமாகத் தோன்றுகின்ற சிக்கல்கள், ஆதன அபிவிருத்தியாளருக்கும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் தோன்றுகின்ற சிக்கல்கள் போன்றவை வாடிக்கையாளர் சேவைகள் பிரிவுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் மத்தியில் அடங்குகின்றன.


துரிதமாக வாடிக்கையார்களின் முறைப்பாடுகளுக்கு தீர்வுகளைக் கண்டறிவதை நோக்கமாகக்கொண்டு வாடிக்கையாளர் சேவைகள் பிரிவினால் துரித அழைப்பு இலக்கமொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதோடு 011 - 2444575 இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமாக வாரத்தின் வேலைநாட்களில் கூட்டாட்சியாதனத்துறையுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய எமது நிறுவனத்துடன் தொடர்புடைய தகவல்களையும் கருத்துக்களையும் பரிமாற்றிக்கொள்வதற்கான இயலுமை அதன் மூலமாக கிடைத்துள்ளது.


இதற்கு மேலதிகமாக கூட்டாட்சியாதன உரிமையாளர்கள் அனைவரும் கூட்டாட்சியாதனச் சட்டம் மற்றும் அவர்களுக்கு முக்கியமானதாக அமையக்கூடிய ஏனைய விடயங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டுதல், கூட்டாட்சியாதனச் சட்டம் பற்றிய அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல், தீவடங்கிலும் அமைந்துள்ள கூட்டாட்சி ஆதனங்கள் பற்றிய மதிப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற அலுவல்கள் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு கூட்டாட்சி ஆதனமொன்றின் சிறந்த வழியுரிமைக்காக அவ்வாதனத்தில் வசிக்கின்ற மக்களின் பங்களிப்பினை முனைப்பாக பெற்றுக்கொண்டு சமுதாயப் பங்கேற்பு முகாமைத்துவ உபாயமுறை ஊடாக அந்த மக்களை மீண்டும் பலமூட்டுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


இதற்கு மேலதிகமாக,

- ☐ இயங்காநிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை மீண்டும் இயங்கச் செய்வதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.
- ☐ கூட்டாட்சி ஆதனங்களின் பொது பூங்காக்கள், சிறுவர் விளையாட்டரங்குகள், துணை வீதிகள் போன்ற பொதுவான ஆதனங்களை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கையளிக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இடையீடு வாடிக்கையாளர் சேவைகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ☐ கூட்டாட்சி ஆதனத்தின் ஆயுட்காலம் முடிவடைந்தபின்னர் அது பற்றிய முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொண்டு அவசியமான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற கருமங்களும் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

வாடிக்கையாளர் சேவைகள் பிரிவில் கூட்டாட்சி ஆதன முறைப்பாடுகள் சம்பந்தமாக தீர்வு வழங்குகின்ற பொறியமைப்பு






முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கு வலுவளித்தல்

ஆதனமொன்றின் சொத்துவத்தை வகிக்கின்ற ஆளொருவருக்கு அந்த ஆதனத்தின் உரிமையாளர் / உரிமையாளர்களால் பராமரித்தல் இடம்பெற்றபோதிலும் கூட்டாக இருப்பாட்சி செய்கின்ற கூட்டாட்சியாதன பொது அம்சங்களையும் பொது வசதிகளையும் பராமரித்தலை குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரால் செய்ய இயலாதென்பதால் கூட்டாக இருப்பாட்சி செய்கின்ற அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த பொது வசதிகளையும் பொது அம்சங்களையும் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் செய்வதற்காக ஏற்படுத்திக் கொள்கின்ற சட்டமுறையான கட்டமைப்பாக அமைவது முகாமைத்துவக் கூட்டுத்தாபனமாகும்.

2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அதிகாரசபை 1,093 கூட்டாட்சி ஆதன முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவியுள்ளது.

கொவிட் 19 நிலைமை காரணமாக வழமைபோல பொதுமக்களுடன் கலந்துகொண்டு கடமைப் பணிகளை ஈடேற்றமுடியாத பின்னணியொன்றிலும்கூட கூட்டாட்சியாதன முகாமைத்துவ அதிகாரசபையின் வாடிக்கையாளர் சேவைகள் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் சட்டப்பிரிவு கூட்டாட்சி ஆதனங்களில் வசிக்கின்ற மக்களின் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாக தோன்றுகின்ற சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக சுகாதாரப் பாதுகாப்புமிக்க முறையியல்களைக் கடைப்பிடித்து அதற்காக இயலுமான உச்ச பங்களிப்பினை காட்டியது.


அதற்கிணங்க அரச மற்றும் தனியார் பிரிவின் கூட்டாட்சி ஆதனங்கள் சம்பந்தமாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களிடமிருந்து கிடைத்த 512 முறைப்பாடுகளில் 416 இற்கு தீர்வுகளை வழங்க 2020 ஆம் ஆண்டில் இயலுமாயிற்று.

2017 தொடக்கம் 2020 வரை நிறுவப்பட்ட அத்தகைய முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் சம்பந்தமான முன்னேற்றம்


முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களையும் குழுக்களையும் பதிவுசெய்தல் / பதிவினைப் புதுப்பித்தல் / இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை இயங்கவைத்தல்

வருடம்	பதிவுசெய்தல்		பதிவினைப் புதுப்பித்தல் / இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை இயங்கவைத்தல்		நிதிசார் (ரூ. ஆயிரம்)	
	இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	முன்னேற்றம்
2017	102	46	891	400	2,385	1,370
2018	48	56	299	546	3,350	1,805
2019	45	59	235	487	2,770	1,753
2020	80	60	750	390	2,700	2,072


முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை பதிவுசெய்தல்.



பதிவினைப் புதுப்பித்தல் / இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை இயங்கவைத்தல்.



முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களையும் குழுக்களையும் பதிவுசெய்ததன் மூலமாக பெற்ற வருமானம்



கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டில் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை அடைய இயலாமல் போயிற்று.

முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுகையில் முகங்கொடுக்க நேரிடுகின்ற சிரமங்கள்

- ஆதனத்தின் பொது அம்சங்களை பராமரிப்பதற்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் முக்கியத்துவம் பற்றி ஆதன உரிமையாளர்கள் கொண்டுள்ள விழிப்புணர்வில் குறைபாடுகள் நிலவுதல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களின் குடியிருப்பாளர்கள் இன்னமும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுதல் சம்பந்தமாக ஆர்வம் காட்டாமை.
- தனியார் நிறுவனங்களால் நிர்மாணிக்கப்படுகின்ற பெரும்பாலான ஆதனங்களின் உரிமையாளர்கள் அவற்றில் நிரந்தரமாக குடியமர்ந்திராமை.
- முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றுவதற்காக தமது நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணிப்பணிப்பதில் வீடுகளில் வதிபவர்களிடம் விருப்பம் நிலவாமை.
- அரச கூட்டாட்சி ஆதனங்களில் வதிபர்கள் பராமரிப்புப் பணத்தைச் செலுத்துத் தவறவிடுதலும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் பதவிதாங்குனர்களுக்கு ஏனைய குடியிருப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்காமையும்.
- அரசாங்கம் நிர்மாணித்த கூட்டாட்சி ஆதனங்களில் அத்துமீறிய கட்டுமாணங்கள் அதிகரித்தமையால் பெரும்பான்மை குடியிருப்பாளர்கள் அது தொடர்பில் காட்டுகின்ற எதிர்ப்பு.
- அரச மற்றும் தனியார் ஆகிய இருபிரிவுகளிலும் அபிவிருத்தியாளர்கள் அல்லது ஆதனக் கொள்வனவாளர்களிடையே நிலவுகின்ற சிக்கல்கள் காரணமாக வீடமைப்புக் கூறுகளின் உரிமையாளர்களுக்கான உறுதிகள் கிடைக்காமல் போனதன்பேரில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்க இயலாமை.

2005 – 2020 வரை இலங்கையில் நிர்மாணித்துள்ள அரச மற்றும் தனியார் கூட்டாட்சி ஆதனக் கூறுகள்



கூட்டாட்சியாதன முகாமைத்துவ அதிகாரசபை தாபிக்கப்பட்ட பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களின் விரிவாக்கம் மேற்படி தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. 2005 தொடக்கம் 2020 வரை மேற்படி கூட்டாட்சி ஆதனங்களில் 1,093 முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

கூட்டாட்சி ஆதனங்களின் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்



சட்டப் பிரிவின் செயற்பொறுப்பு

திருத்தச் சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்ட 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்தின் 6 (க) பிரிவின் பிரகாரம் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட தற்காலிக கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சிக் பகுதிகளின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கும் அதன் உரிமையாளருக்கும் இடையில் அல்லது உரிமையாளருக்கும் கொள்வனவு செய்தவருக்கும் இடையில் அல்லது உரிமையாளருக்கும் அடகு பெற்றவருக்கும் இடையில் அல்லது அடகு பெற்றவருக்கும் கொள்வனவுசெய்யக் கருதியுள்ளவருக்கும் இடையில் அல்லது அடகு பெற்றவருக்கும் அடகு வைத்தவருக்கும் இடையில் தோன்றுகின்ற பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் அதிகாரம் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது.

அதன்கீழ் அதே சட்டத்தின் 16 (1) பிரிவில் மேலே குறிப்பிடப்பட்ட தரப்பினர்களுக்கிடையில் கூட்டாட்சியாதன பகுதியொன்றை பாவிக்கையில் அல்லது கையேற்கையில் அல்லது அதனோடு இணைந்த பொது வசதிகள் அல்லது பொது அம்சங்களை இருப்பாட்சி செய்கையில் ஏதேனும் பிணக்கு தோன்றிய சந்தர்ப்பத்தில் அந்த ஆள் அல்லது முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் அது பற்றி அதிகாரசபைக்கு அறிவிக்க வேண்டுமெனவும் அதிகாரசபையினால் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நீதியானதும் நியாயமானதுமான பணிப்புரையொன்று விடுக்கப்படல் வேண்டுமெனவும் காட்டப்பட்டுள்ளது.

அதற்கிணங்க வாடிக்கையாளர் சேவைகள் பிரிவினால் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுக்கும் கூட்டாட்சி ஆதனத்தின் வதிவாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் போன்றே பொறியியல் பிரிவினால் ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட சிக்கல் எழுத்து மூலமாக அல்லது பேச்சுவார்த்தை மூலமாக தீர்க்கப்பட முடியாத சந்தர்ப்பங்களில் சட்டப்பிரிவிடம் ஆற்றுப்படுத்தப்படுவதோடு சட்டப் பிரிவினால் மேற்படி சிக்கல் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை மூலமாக நியமிக்கப்படுகின்ற விசாரணை உத்தியோத்தருக்கு ஆற்றுப்படுத்தப்படும். விசாரணை உத்தியோகத்தரால் வழங்கப்படுகின்ற விதப்புரைகளின் பிரகாரம் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் பணிப்புரை விடுக்கப்படுவதோடு அத்தகைய பணிப்புரையை மீறுகின்ற அல்லது கடைப்பிடிப்பதை தவறவிடுகின்ற ஆட்கள் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்தின் 25 வது பிரிவின் பிரகாரம் தவறுபுரிபவர் ஆவார். சட்டப் பிரிவினால் பணிப்புரையை ஏற்றுநடக்காத ஆட்களுக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு பிறிதொரு தரப்பினரால் அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கு தொடர்பிலும் சட்டப்பிரிவு தோற்றும்.


மேற்சொன்ன பணிகளுக்கு மேலதிகமாக நடப்புத் தேவைகளுக்கிணங்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்திற்கும் இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்திற்கும் ஏற்புடைய திருத்தங்கள் இனங்காணப்பட்டு மேற்சொன்ன சட்டங்களை திருத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் சட்டப்பிரிவுடன் தொடர்புடைய செயற்பொறுப்பாகும்.

அத்துடன் கூட்டாட்சி ஆதனங்களுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆளிடமிருந்து அல்லது கூட்டாட்சி ஆதனங்களின் உரிமையாளரிடமிருந்து ஏதேனும் பணத்தொகை அறவிடப்படவேண்டியுள்ள தருணத்தில் அப்பணத்தொகையை அறவிட்டுக்கொள்ள ஏற்புடைய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களம், பதிவாளர் தலைமை அதிபதி திணைக்களம், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம் போன்ற நிறுவனங்களுடன் இணைப்பாக்கம்செய்து கூட்டாட்சி ஆதனங்களுடன் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்கிப் புரிதல் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் கூட்டாட்சி ஆதன அபிவிருத்தியாளர்கள், முகாமைத்துவக் குழு உத்தியோகத்தர்கள், கூட்டாட்சி ஆதன வதிவாளர்கள் போன்றே கூட்டாட்சி ஆதனத் துறையுடன் சம்பந்தப்பட்ட தொழில்வாண்மையாளர்கள் போன்றவர்களுக்கு கூட்டாட்சி ஆதனச் சட்டம் பற்றி விழிப்புணர்வூட்டுதலும் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக கூட்டாட்சி ஆதனங்கள் பற்றி நிலவுகின்ற சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அவசியமான ஒத்துழைப்பினை வழங்குதலும் சட்டப் பிரிவினால் மேற்கொளளப்படுகின்றது. கூட்டாட்சி ஆதனங்களில் வசிக்கின்ற மக்களின் சட்டச் சிக்கல்களை தீர்த்துவைத்து மிகவும் வசதியான வாழ்க்கையைக் கழிக்க அவசியமான வழிகாட்டல் சட்டப்பிரிவினால் வழங்கப்பட்டு வருகின்றது.

சட்டப் பிரிவில் முறைப்பாடுகள் சம்பந்தமாக தீர்வு வழங்குகின்ற பொறியமைப்பு



கூட்டாட்சியாதன பாவனையின்போது தோன்றுகின்ற சிக்கல்கள்

விசாரணை சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் வடிவத்திற்கிணங்க கீழக்காணும் வகையில் வகைப்படுத்த இயலும்.

- கூட்டாட்சிக் கட்டிடத்தை நிர்மாணித்து விற்பனை உடன்படிக்கையொன்று மூலமாக விற்பனைசெய்து 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளபோதிலும் கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்யாமல் வதிவாளர்களுக்கு உறுதிகளை வழங்காமை.
- கூட்டாட்சி ஆதனங்களில் நிலவுகின்ற குறைபாடுகளை அபிவிருத்தியாளர் திருத்தியமைக்காமை.
- பொது அம்சங்களும் பொது வசதிகளும் அங்கீகரித்த கட்டிடத் திட்டத்திற்கு அமைவாக நிர்மாணிக்காமை.
- உரிமையாளர்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு மாதாந்த பராமரிப்புத் தொகையை செலுத்தாமை..
- அத்துமீறிய நிர்மாணிப்புகளை மேற்கொள்ளல் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் , பொது நிலப்பரப்பு பாவனையின்போது தோன்றுகின்ற சிக்கல்கள்.
- கூட்டாட்சி ஆதனங்களில் செல்லப் பிராணிகளை வளர்த்தல்.

தீர்வுகளை வழங்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை	
2018	48
2019	64
2020	32

பொதுமக்களின் மனக்குறைகளுக்கு தலைசிறந்த பிரதிபலிப்பு செய்வதற்கான தாபனஞ்சார் பொறியமைப்பு

முறைப்பாடு கிடைத்த பின்னர் பிரதிவாதி தரப்பினருக்கு முறைப்பாட்டின் பிரதியொன்றை அனுப்பி அது சம்பந்தமான அவதானிப்பகளை 14 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளல்.

- அவதானிப்புகள் கிடைத்து 02 வாரங்களுக்குள் விசாரணைக்காக அழைப்புவிடுத்தல்.
- இணக்கம் பெறப்படின் முதலாவு நாளிலேயே அதனை அறிவித்து விசாரணையை நிறைவுசெய்தல்.
- இணக்கம் காண இயலாவிடின் விசாரணைக்காக முன்வைத்தல் / அழைப்பித்தல்.
- வாய்மொழிமூல சான்றுகள் அல்லது எழுத்துலான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல்.

அதற்கிணங்க,

- பணிப்புரைகளை விடுத்தல்.
- பணிப்புரையை கடைப்பிடிக்காவிடத்து நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சமுதாய சுகாதார பாதுகாப்பிற்காக கொவிட் 19 இற்கு எதிராக



2020 கொவிட் நிலைமைக்கு முகங்கொடுப்பதற்காக அரசாங்கம் மூலமாக ஈடேற்றப்பட்ட தொற்றுநோய்த்தடை நிகழ்ச்சித்திட்டம் ஏனைய உலக நாடுகளை விஞ்சியதாக விரிவடைவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தலைசிறந்த செயற்பாடாகும். அதன்போது தாபனஞ்சார் சமூகப் பாதுகாப்பு பொறுப்பு என்றவகையில் கருதி 2020 ஆம் ஆண்டில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையும் கொவிட் ஒழிப்பு நிதியத்திற்காக ஒதுக்க வைப்பிலிருந்து 10 மில்லியன் ரூபா நிதிசார் கொடையினை அதிகாரசபையின் தலைவர் கௌரவ பிரதமரிடம் கையளித்தார்.



நிலைபெறுதகு நகரங்களையும் குடியிருப்புகளையும் உருவாக்குதல்.



உயிர்ப்பன்வகைமை மற்றும் உயிர்ச்சூழலைப் பாதுகாத்தல்

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள

நிலைபெறுதகு அபிவிருத்தி உபாய மார்க்கங்கள்

எதிர்வரும் ஆண்டிலிருந்து ஆதன அபிவிருத்தியாளர்கள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்காக சுற்றாடல்நேயமுள்ள மற்றும் அதன் பேரில் அதிக பெறுமதிகொண்ட கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணித்தல் சம்பந்தமாக பூர்வாங்க தடையொழிப்பு வேளையில் விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

நிலைபெறுதகு அபிவிருத்தி உபாயமார்க்கம் 07

அதைப்போலவே கூட்டாட்சி ஆதனமொன்றை திட்டமிடுகையில் இயற்கை வெளிச்சமும் வளிச்சுற்றோட்டமும் அதிகரிக்கத்தக்கவகையில் நிர்மாணிப்பதன் மூலமாக வலுச்சக்தியை சேமித்துக்கொள்ள பங்களிப்புச் செய்தல்.

சூரிய வலுச்சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை பிறப்பித்தல்.

கழிவு நீர், சாக்கடைத் தொகுதியை மீள்சுழற்சியாக்குதல்

மழை நீர் மீள்சுழற்சியாக்க செயற்பாங்கு

திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ முறைமையைத் தாபித்தல்.

நிலைபெறுதகு அபிவிருத்தி உபாயமார்க்கம் 11

இதன் கீழ் புதிய முகாமைத்துவக் கூட்டுத்தானங்களை நிறுவுதல், இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை இயங்கவைத்தலும் இயங்குகின்ற முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை முறைப்படி பேணிவருவதற்கான ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. "பலம்பொருந்திய முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் வசதியான மாடிவீட்டு வாழ்க்கைக்கான உறுதுணையாகும்" தொனிப்பொருளின் ஊடாக கூட்டாட்சி மாடி வீடுகளில் வசிப்பவர்களுக்கு உன்னதமான சேவை அதன்மூலமாக வழங்கப்படுகின்றது.

நிலைபெறுதகு அபிவிருத்தி உபாயமார்க்கம் 15

கூட்டாட்சி ஆதனமொன்றை நிர்மாணிக்கையிலும் திட்டமிடுகின்ற வேளையிலும் பழைய மரங்கள்

ஆகிய விடயங்கள் சம்பந்தமாகவும் கூட்டாட்சி ஆதனமொன்றை நிர்மாணிக்க முன்னர் அதனோடு சம்பந்தப்பட்ட தரப்பினரை விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதுகாக்கப்படத்தக்கவகையிலும் நிர்மாணிப்பின் பின்னர் பொது இடங்களில் பதிய மரநடுகையை மேற்கொள்ளல். அதன் மூலமாக வீடுகளில் வசிப்பவர்களுக்கு மிகவும் தூய்மையான வளிச்சுற்றோட்டத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைதல்.

நிலைபெறுதகு அபிவிருத்தி உபாயமார்க்கம் 15

2020 ஆம் ஆண்டில் உலகளாவிய கொவிட் 19 பெருந்தொற்று நிலைமையின் மத்தியில் தேசத்தின் உணவுப் பாதுகாப்பிற்காக அரசாங்கத்தினால "நாளைய தினத்திற்காக இன்றே பயிர்செய்வோம" நாடளாவிய பயிர்ச்செய்கைப் போராட்டம் அமுலாக்கப்பட்டது. கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையும் கூட்டாட்சியாதனத் துறையின் ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் மேற்படி கருத்திட்டத்தை வெற்றியீட்டச் செய்விப்பதற்காக மாடி வீடுகளில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வேலுவனபுர வீடமைப்புத் திட்டத்தில் முன்னோடிக் கருத்திட்டமென்றவகையில் பயிர்செய்கைப் போராட்ட நிகழ்ச்சிதிட்டமொன்றை அமுலாக்கியது.

பாதுகாப்பான, நெகிழ்ச்சித்தன்மைகொண்ட மற்றும் நிலைபெறுதகு மானிட மற்றும் குடியிருப்புகளை உருவாக்குதலுடன் இசைவுடையதாக வீடமைப்புத் திட்டங்களில் மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டதோடு ஹோமாகம ஜல்தர மற்றும் வேலுவனபுர வீடமைப்புத் திட்டங்களில் மூலிகைச் செடிகளையும் தாவரங்களையும் நடுகைசெய்கின்ற கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது மேற்படி வீடமைப்புத் திட்டங்களில் பெறுமதிமிக்க ஏறக்குறைய 300 உள்நாட்டுத் தாவரங்களும் செடிகளும் நடுகை செய்யப்பட்டன.

2000 ஆம் ஆண்டில் நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் வெளியிடப்பட்டன. ஐக்கிய நாடுகளின் செயற்பாட்டுக் குழுவினை உள்ளிட்ட பல்வேறு அரச மற்றும் தனியார் அமைப்புக்கள் மூலமாக நடாத்தப்பட்ட நீண்டகால மற்றும் சிக்கலான பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் முன்வைக்கப்பட்டன. பிரதானமாக கருத்திற்கொண்டால் நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள் கட்டமைப்பானது வறுமையை ஒழித்தல், புவியை பாதுகாத்தல் மற்றும் அனைவருக்கும் சௌபாக்கியத்தை உருவாக்குவதற்கான செயற்பாட்டுத் திட்டமாகும். நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் கட்டமைப்பானது உலகின் நிலைபேறான, உறுதியான அபிவிருத்திப் பாதைக்கு வழிப்படுத்த பங்களிப்புச் செய்கின்ற தெளிவான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பல முன்னெடுப்புகளை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காக ஐக்கிய நாடுகள் தாபனத்தைச் சேர்ந்த அனைத்து அங்கத்துவ நாடுகளும் மேற்சொன்ன குறிக்கோள்களை ஈடேற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளன.

17 நோக்கங்கள், தொடர்புடைய 169 இலக்குகள், 230 சுட்டிகள் ஊடாக நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் நாடொன்றின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் தரநியமங்களின் விருத்திக்காக அமுலாக்குவதற்கான உபாய மார்க்கத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க இலங்கையும் மேற்சொன்ன குறிக்கோள்களை அடைவதற்காக 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டம் மூலமாக ஏற்புடைய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையும் கூட்டாட்சித் துறையின் அரச ஒழுங்குறுத்தல் அதிகாரசபை என்றவகையில் அதிகாரசபையினால் அமுலாக்கப்பட்ட பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் உபாயமார்க்கத் திட்டங்கள் ஊடாக மேற்சொன்ன குறிக்கோள்களை வலுவுடையதாக்க பங்களிப்பு நல்கியுள்ளது.





வேலுவனாராம வீடமைப்பத் திட்டம் மற்றும் ஜல்தர அரச ஊழியர் வீடமைப்புத் திட்டங்களில் அமுலாக்கப்பட்ட மர நடுகைக் கருத்திட்டம்

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் ஒழுங்குறுத்தல் இடையீடு



கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் ஒழுங்குறுத்தல் இடையீடு

- கடந்த பல தசாப்தங்களுக்கு மேலாக நிர்மாணித்து இருப்பாட்சியை வழங்கியுள்ளபோதிலும் இற்றைவரை கூட்டாட்சி ஆதனமொன்றாக பதிவுசெய்யப்பட்டிராத வீடுகளின் இருப்பாட்சியாளர்களுக்கு உரிமையைக் கையளிக்க இயலாதுள்ள ஆதனங்களை பதிவுசெய்யக்கூடியவகையில் 1999 இன் 04 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சிறப்பேற்பாடுகள் சட்டம் மீண்டும் திருத்தப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் அப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டதோடு அதன் பெறுபேறாக அச்சட்டம் 2018.08.08 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டதோடு அதன்மூலமாக ஏறக்குறைய 15 வருடகாலமாக உறுதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த ஏறக்குறைய 8,000 குடும்பங்களுக்கு இதன் மூலமாக நன்மை கிடைத்தது.

- 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்திற்கும் 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்திற்கும் ஏற்புடைய திருத்தங்களை தயாரிப்பதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழு இன்றளவில் அவசியமாகின்ற அனைத்து முன்மொழிவுகளையும் செய்து அவ்வறிக்கையை சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்துள்ளது. அதன் மூலமாக கூட்டாட்சியாதனத் துறையில் பெரும்பாலான நடைமுறைச் சிக்கல்களுக்கு தீர்வுகள் கிடைப்பதோடு அதிகாரசபைக்கு நடப்புத் தேவைகளுக்கிணங்க தீர்வுகளை வழங்குவதற்கான இயலுமையும் இதன்மூலமாக வழங்கப்பட்டுள்ளது. லைனயூஅர் டசரமனடசமு றயூடனபி அம்ப லன ழெயழு மளதனை றாள்ளடட் அம்ப றழனஇ தம கச.ஸ்ரீஇனளை தஇப றழனஇ ற்ள ப்கலுயஜ .நளப் அமூா 2017 உஞஇள ரை 05 தம ணூாம றஒட 2026/25 ாபக்ய மளடஸ்ரீய டசம இணூர.

- கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்துடனும் இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்துடன் எற்புடைய ஒழுங்குவிதிகளுடனும் சம்பந்தப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை 2017 யூலை 05 ஆந் திகதி இலக்கம் 2026 / 25 இன் கீழ் வெளியிடப்பட்டது.

பணிப்பாளர்சபைக் கூட்டம்

2020 ஆம் ஆண்டின் மார்ச்சு மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் மே மாதம் வரையும் மீண்டும் 2020 ஒற்றோபர் 04 ஆந் திகதியிலிருந்தும் நாட்டுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் 19 பெருந்தொற்று நிலைமையின்பேரில் கொழும்பு ஆளுகைப் பிரதேசத்தை உள்ளிட்ட முழுநாடும் இடைக்கிடையே முடக்கப்பட்டமையும் நடமாட்ட மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை போன்றவற்றின் பேரிலும் 2020 ஆம் ஆண்டுக்காக பணிப்பாளர்சபைக் கூட்டங்களை நடாத்துதலும் மட்டப்படுத்தப்பட்டது. 2020 ஆம் அண்டில் அதிகாரசபையில் 07 பணிப்பாளர்சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு துறைசார்ந்த பல முக்கியமான பணிப்பாளர்சபைப் பத்திரங்கள் தொடர்பிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட உண்மையான மற்றும் நிகழ்கால ஊழியர் மதிப்பீடு

பதவி	அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை	உண்மையான ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
பொதுமகாமையாளர் - பணிப்பாளர்சபை செயலாளர்	01	01	-
பிரதிப் பொது முகாமையாளர் (ஒழுங்குறுத்தல்)	01	-	01
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)	01	01	-
உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்)	02	01	01
உதவிப் பொது முகாமையாளர் (ஒழுங்குறுத்தல்)	01	01	-
உதவிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள் பராமரிப்பு)	04	03	01
உதவிப் பொது முகாமையாளர் (மனித வள முகாமைத்துவம்)	01	-	01
உதவிப் பொது முகாமையாளர் (கட்டிடக்கலை விஞ்ஞானி)	01	-	01
உதவிப் பொது முகாமையாளர் (வாடிக்கையாளர் சேவைகள்)	01	-	01
உதவிப் பொது முகாமையாளர் (நிதி)	01	01	-
உள்ளக கணக்காய்வாளர்	01	01	-
வாடிக்கையாளர் சேவைகள் உத்தியோகத்தர்	02	02	-
சிரேட்ட பொறியியல் உதவியாளர்	05	01	04
முகாமைத்துவ தகவல் முறைமை உத்தியோகத்தர்	01	01	-
செயலாளர்	02	01	01
நிருவாக உத்தியோகத்தர்	01	-	01
கணக்கு உத்தியோகத்தர்	01	01	-
உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	01	01	-
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுடபம் (பொறியியல் உதவியாளர் / திட்டமிடல் வினைஞர்)	14	13	01
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் (புத்தகம் பதியுனர்)	01	01	-
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத	39	38	01
ஆரம்பநிலை வினைஞர் - (சாரதிகள்)	14	14	-
தச்சுத்தொழில் புரிபவர்	02	02	-
மேசன்	02	02	-
பம்பி இயக்குனர் / பொறுப்பாளர்	08	07	01
நீர்க் குழாய் காய்ச்சியிணைப்பவர்	01	01	-
ஆரம்பநிலை - பகுதியளவிலான வினைஞர் (மின்சாரத் தொழில்நுட்பவியலாளர்)	02	02	-
புத்தகம் கட்டுனர்	01	-	01
ஆரம்பநிலை வினைஞர் அல்லாத - (அலுவலக உதவியாளர் / (பயிற்றப்படாத தொழிலாளி)	21	19	02
வீட்டுப் பராமரிப்பாளர்	07	07	-
கூட்டுத்தொகை	140	122	18

பதவியணி மறுசீரமைப்பு

2020 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை 140 ஆக அமைந்தபோதிலும் 2020 திசெம்பர் மாதமளவில் பணியாளர் எண்ணிக்கை 122 ஆக விளங்கியது. ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கிணங்க நிலவுகின்ற வெற்றிடங்களை 2021 ஆம் ஆண்டில் நிரப்ப எதிர்பார்க்கப்படுகின்றது.


அதிகார சபையின் பணியாளர்களைப் பயிற்றுவித்தல்


2020 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க நிலவிய கொவிட் பெருந்தொற்று நிலைமைக்குள்ளேயும் அதிகாரசபையின் பணியாளர்களை பயிற்றுவிப்பதற்காக திட்மிடப்பட்டிருந்த ஒருசில பயிற்றுவித்தல்கள் மாத்திரம் இடம்பெற்றன.

வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகள்

கொவிட் பெருந்தொற்று நிலைமையின்கீழ் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளை நடாத்த இயலாமல் போயிற்று

தாபனம்சார் திட்டம்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை





ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை

சிரேட்ட முகாமைத்துவம	03
நடுத்தர முகாமைத்துவம்	12
கனிட்ட முகாமைத்துவம்	13
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்	15
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத	39
அரம்பநிலை – வினைஞர்	18
ஆரம்பநிலை – பகுதியளவிலான வினைஞர்	12
ஆரம்பநிலை – வினைஞர் அல்லாத	28

2020 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மீளாய்வு அறிக்கை

2020 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அறிக்கை கீழே குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களை

திருமதி பீ. என் கமகே
குழுவின் தலைவர்
மேலதிக பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவுசெலவுத் திணைக்களம்
(திறைசேரி பிரதிநிதி)

திரு. லலித் எதிரிசிங்க
குழு அங்கத்தவர்
பொது முகாமையாளர் (பதில்)
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
கொழும்பு 02.

சட்டத்தரணி திருமதி ரோ'னீ திசாநாயக்க
குழு அங்கத்தவர்
நகர ஆணையாளர்
தெகிவல - கல்கிஸ்ஸ மாநகர சபை

திருமதி டபிள்யு. ரீ.எல். மானெல்
குழு அங்கத்தவர்
நகர ஆணையாளர்
தெகிவல - கல்கிஸ்ஸ மாநகரசபை

திரு. எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும
குழு அங்கத்தவர்
நகர ஆணையாளர்
தெகிவல - கல்கிஸ்ஸ மாநகரசபை
2020.12.21

திருமதி ஏ. டீ.எஸ் சதீகா
குழு அங்கத்தவர்
நகர ஆணையாளர்
ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகரசபை

திரு. சஞ்சீவ பண்டுகீர்த்தி
குழு அங்கத்தவர்
நகர ஆணையாளர் (பதில்)
ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகரசபை
2020.12.07

திரு. பி.எல்.எம். சத்துரங்க
குழு அங்கத்தவர
நகர ஆணையாளர் (பதில்)
ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகரசபை
2020.12.21

திருமதி.வீ.டீ. சீதா
குழு அங்கத்தவர்
கணக்காய்வு அத்தியட்சகர்
பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பிரதிநிதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

திரு. ஆர். எஸ். சமரக்கொடி
குழு அங்கத்தவர்
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு

திரு. ஈ.எல்.ஏ.பீ. குமார
குழு அங்கத்தவர்
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றல்
மற்றும் சமுதாய துப்பரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
2020.12.07 ஆந் திகதி தொடக்கம்

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் என்றவகையில் பின்வரும் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

சட்டத்தரணி சரண கருணாரத்ன
தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

திரு. ஆர்.கே. ஜயவீர
பொது முகாமையாளர்
2020.04.30 ஆந் திகதி வரை

திருமதி மாதவி எஸ். பரணயாப்பா
பொது முகாமையாளர் (பதில்)
2020.06.12 தொடக்கம் 2020.11.25 வரை

கலாநிதி இந்துநில் லியனகே
பொதுமுகாமையாளர்
2020.11.26 ஆந் திகதி தொடக்கம்

திரு. கே.எச்.ஏ. உபாலி
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

திரு. ஜே.டி.என். சந்திரபால
பிரதிப் பொது முகாமையாளர் (பதில்) (ஒழுங்குறுத்தல்)
2020.10.13 வரை

திரு. பி. எம். மஹே குணதிலக்க
உள்ளக கணக்காய்வாளர்

திரு. பி. அமில நி'ாந்த
உதவிப் பொது முகாமையாளர் (நிதி)

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை 2020 ஆம் ஆண்டுக்காக 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தி உள்ளதோடு கீழே குறிப்பிடப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுப் பத்திரங்கள் கலந்துரையாடப்பட்டு பணிப்பாளர் சபையின் விதப்புரைக்காக சமர்ப்பிக்கபப்பட்டுள்ளன.

மேலும் 2020 ஆம் ஆண்டின் மார்ச்சு 16 தொடக்கம் மே மாதம் வரையிலும் மீண்டும் 2020 ஒற்றோபர் 04 ஆந் திகதி தொடக்கம் தொடர்ச்சியாகவும் நாட்டை துரதி'டவசமாக பாதித்த கொவிட் 19 வைரஸ் பெருந்தொற்று நிலைமையின்கீழ் கொழும்பு ஆளுகைப் பிரதேசத்தை உள்ளடக்கிய தீவடங்கிலும் இடைக்கிடையே முடக்குதல் இடம்பெற்றமையாலும் நடமாட்டத் தடைகள் விதிக்கப்பட்டமையாலும் 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுடன் தொடர்புடைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

01. 2020.03.06 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

1.1 2019 ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் அறிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டமை.

1.2 2019.12.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் ஆண்டிறுதிக் கணக்குகள் (செயலாற்றுகைக் கூற்றும் நிதி நிலைமை பற்றிய கூற்றும்)

1.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம்.

1.4 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

1.5 2020 ஆம் ஆண்டு தொடர்பாக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் தத்துவங்களை கையளித்தல

1.6 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டு தொடர்பிலான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம்

1.7 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2019 ஆண்டு தொடர்பிலான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு ஐயவினாக்கள்

1.8 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள்

1.9 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2020 - 2024 தொடர்பிலான கூட்டுத் திட்டம்

02. 2020.09.03 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அவற்றுக்கு அவசியமான விதப்புரைகள் / அவதானிப்புகள் / குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

2.1 2020 மார்ச்சு மாதம் 06 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் அறிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டமை.

2.2 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் படியான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

2.3 2020 சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2020 யூலை மாதம் 31 ஆந் திகதி வரையான நிதிசார் செயற்பாங்கு (வருமானம் மற்றும் செலவினம்) அறிக்கை

2.4 கூட்டாட்சியாதனங்களின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்ளை பதிவுசெய்தல் மற்றும் பதிவினை புதுப்பித்தல் சம்பந்தமாக இற்றைப்படத்தப்பட்ட அறிக்கை

2.5 கழித்தொதுக்கிய பண்டங்களை அப்புறப்படுத்துதல் - ஆண்டு 2020

2.6 ஏனைய விடயங்களின் கீழ்,

(1) 2021 ஆம் ஆண்டுக்காக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், நிதிசார் தத்துவங்களை கையளித்தல், உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், கூட்டுத் திட்டம், பெறுகைத் திட்டம் முதலியவற்றைத் தயாரித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் விதப்புரைகளுக்காக சமர்ப்பிக்க குழுவின் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

(2) பெறுகைத் திட்டத்தை தயாரிக்கையில் பெறுகை வழிகாட்டிக்கோவையில் காட்டப்பட்டுள்ள மாதிரிகளுக்கமைவாக தயாரிக்குமாறு கணக்காய்வு அத்தியட்சகர் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

03. 2020.12.17 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அவற்றுக்கு அவசியமான விதப்புரைகள் / அவதானிப்புகள் / குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

3.1 2020.09.03 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் அறிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டமை.

3.2 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின்படியான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

3.3 2020 செத்தெம்பர் மாதம் தொடர்பான வங்கி இணக்க அறிக்கைகள் பற்றிய விபரங்கள்.

3.4 2020 ஒற்றோபர் மாதம் தொடர்பான வங்கி இணக்க அறிக்கைகள் பற்றிய விபரங்கள்.

3.5 மனித வளங்கள் அறிக்கை - 2020 ஒற்றோபர்.

3.6 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் மீளாய்வு அறிக்கை

3.7 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2019.01.01 ஆந் திகதி தொடக்கம் 2019.12.31 வரையான வாகனச் செலவுகள் பரீட்சித்தல் பற்றிய உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள்.

3.8 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை தொடர்பான கணக்காய்வு ஐயவினாக்கள்

3.9 2020 சனவரி மாதம் 01 அந் திகதி தொடக்கம் 2020 நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரையான நிதிச் செயற்பாடுகள் அறிக்கை (வருமானம் மற்றும் செலவினங்கள்.)

3.10 ஏனைய விடயங்களின் கீழ்,

(1) 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு அறிவுறுத்தல் வழங்கியது.

(2) தேசிய வீடமைப்பு திணைக்களக் கட்டிடத்தின் முதலாவது மாடியில் அமைந்துள்ள கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை வாடகை அடிப்படையில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்டுள்ளமையால் அது சம்பந்தமான குத்தகை உடன்படிக்கை 2020 திசெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் 2022 நவெம்பர் 30 வரையான காலப்பகுதிக்காக கைச்சாத்திடப்பட குழுவினால் அறிறுவுத்தல்கள் வழங்கப்பட்டன.

(3) கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை அரச ஆதிக்கமுடைய நிறுவனமொன்றாக கருதப்படுவதால் நிருவாக, முகாமைத்துவ மற்றும் தொழிற்பாட்டுப் பணிகளில் பொது திறைசேரியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள், சாப்புகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக மேற்படி சுற்றிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிராத விடயங்களில் பலவிதமாக சிக்கல்களை எதிர்நோக்க நேரிடுவதால் அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அரசாங்க நிருவாகச் சுற்றிக்கைகளைப் பயன்படுத்திக்கொள்ள பணிப்பாளர் சபையிடமிருந்து கொள்கைரீதியான தீர்மானமொன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பணிப்பாளர்சபைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு குழு அறிவுறுத்தல் வழங்கியது.

04. 2020.12.21 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பின்வரும் அறிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. அவற்றுக்கு அவசியமான விதப்புரைகள் / அவதானிப்புகள் / குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

4.1 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவு அறிக்கை

4.2 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் அதிகாரத் தத்துவங்களை கையளித்தல் - 2021

4.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம்

4.4 2020 நவெம்பர் மாதத்துடன் தொடர்புடைய வங்கி இணக்க விபரம்.

4.5 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2021 - 2025 வருடம் தொடர்பான கூட்டுத் திட்டம்

4.6 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2021 தொடக்கம் 2023 வரையான கூட்டுப் பெறுகைத் திட்டம் மற்றும் 2021 ஆம் ஆண்டின் விபரமான பெறுகைத் திட்டம்

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டு தொடர்பான வருடாந்த வரவு செலவுத் திட்டம், வருடாந்த பெறுகைத் திட்டம், செயற்பாட்டுத் திட்டம், கூட்டுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கான அறிவுறுத்தல்களை குழு வழங்கியது.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் அதிகரித்துக் கொள்வதற்காகவும் சாதகமான நிருவாக நிதிசார் ஒழுக்கத்தைப் பேணிவருவதற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தொடர்ச்சியாக அறிவுறுத்தல்களை வழங்கியது.

அதற்கு மேலதிகமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்ட அறிக்கைகள் பணிப்பாளர் சபையின் கவனத்திற்காகவும் அங்கீகாரத்திற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்ட அறிக்கைகளின் பிரதிகள் வரிசை அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.



வலிமையான

முகாமைத்துவ

கூட்டுத்தாபனம்

வசதியான வாழ்க்கை முறைக்கான பக்கபலமாகும்



கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கானது

நிதிசார் கூற்றுகள்

முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முனைப்பழியுள்ள அப்பிபிராயத்திற்கான அடிப்படை

அதிகாரசபையின் 2020 வருடாந்த அறிக்கையில் அடங்கிய தகவல்கள்

நிதிக் கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு

நிதிசார் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு

பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

ஏனைய விடயங்கள்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இலக்கம / My No. } எச் / யு / டீ / சீஎம்ஏ / 01 / 20 / 04

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date. } 2021 யூலை 22

தலைவர்

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றி 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

.....

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

டபிள்யு. பி. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள - 1. செயலாளர் , நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றல் மற்றும் துப்பரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
2. செயலாளர், நிதி அமைச்சு

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } எச் / யූ / ඩ / சீஎம்ஏ / 01 / 20 / 04

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2021 யூலை 22

தலைவர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றி 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

.....

1. நிதிக் கூற்றுகள்
.....

1. 1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
.....

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று, நிதிக் கூற்றுகள் பற்றிய குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளிட்ட 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தினதம் எற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கம் நீங்கலாக அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் ஊடாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதிநிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்வு இலங்கை அரச பிரிவு கணக்காய்வுத் தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலக்கம் 07 தொடக்கம் 55 வரையான இலங்கை அரச பிரிவு கணக்காய்வுத் தரநியம பந்திகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூ. 8,949,317 ஆக அமைந்த மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் சம்பந்தமான அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு தரநியமத்தின் 65 வது பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் துணைநிலைப் பெறுமதியும் பயனுள்ள ஆயுட்காலமும் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்தபோதிலும் ஏற்கெனவே பாவிக்கப்பட்டு வருகின்ற கிரயம் ரூ. 34,610,524 ஆக அமைந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் இலங்கை அரச பிரிவு கணக்காய்வுத் தரநியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையினாலும் அதிகாரசபைக்கு எதிராகவும் நிலவிய 39 வழக்குகள் சம்பந்தமாக இலங்கை அரச பிரிவு கணக்காய்வுத் தரநியம இலக்கம் 08 இன் 105 மற்றும் 108 ஆகிய பந்திகளின் பிரகாரம் தோன்றக்கூடிய எதிர்பாரா பொறுப்புக்கள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2019 ஆம் ஆண்டில் மென்பொருள் கொள்வனவுக்காக உறப்பட்ட ரூ. 950,880 பணத்தொகை இலங்கை அரச பிரிவு கணக்காய்வுத் தரநியம இலக்கம் 20 இன் பிரகாரம் அருவச் சொத்துக்களாக கணக்குப் பதியப்படாமல் கணினிச் செலவுகளாக நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தமையை மீளாய்வாண்டிலும் திருத்தியிருக்கவில்லை.

(ஈ) "நகமு புரவர" நிகழ்ச்சித்திட்டத்திற்காக பொது திறைசேரியிடமிருந்தும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்தும் கிடைத்திருந்த ரூ. 1,144,729 நீண்டகால பொறுப்புக்கள் என்றவகையில் காட்டப்படுவதற்குப் பதிலாக 05 வருடங்களுக்கு மேலாக நடைமுறைப் பொறுப்பின்கீழ் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் அதிகாரசபைக்குச் சொந்தமான களஞ்சியப் பண்டங்கள் நிகர தேறிய பெறுமானத்தில் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தபோதிலும் ரூ. 1,584,997 ஆக அமைந்த மேற்படி பண்டங்களின் நிகர தேறிய பெறுமானத்தைக் கணப்பீடுசெய்த விதம் பற்றியும் கூட்டுத்தொகை ரூ. 1,386,534 ஆக அமைந்த மூன்று கடன்பெறுனர்கள் அவர்களின் கடன்களை செலுத்தித் தீர்த்ததாக காட்டி நாளேட்டுக் குறிப்பு மூலமாக அந்த கடனை முந்திய வருடத்திற்கான சீராக்கல் கணக்கில் சீராக்கிய விபரங்களையும் கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு (இ.க.த.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வுத் தரநியமங்களின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவையும் உசிதமானவையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 அதிகாரசபையின் 2020 வருடாந்த அறிக்கையில் அடங்கிய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட அதிகாரசபையின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் நிதிசார் கூற்றுகள் மற்றும் அவை சம்பந்தமாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்களாக கருதப்படுகின்றன. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிசார் கூற்றுகள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மூலமாக ஏனைய தகவல்கள் உள்டக்கப்படுவதில்லை என்பதோடு நான் அது சம்பந்தமாக எவ்விதத்திலும் உத்தரவாமளித்தலோ அபிப்பிராயம் தெரிவித்தலோ மேற்கொள்ளமாட்டேன்.

மேலே இனங்கண்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள இயலுமானவிடத்து வாசித்தலும் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதிசார் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறுவிதமாக பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கிணங்க கணியரீதியாக பொருந்தாதுள்ளனவா என்பதை கவனித்துப் பார்த்தலுமே கணக்காய்வுடன் தொடர்புடையதான நிதிசார் கூற்றுகள் சம்பந்தமான எனது பொறுப்பாக அமைகின்றது.

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையிலும் என்னால் புரியப்பட்ட கருமங்களின் அடிப்படையிலும் இந்த ஏனைய தகவல்கள் கணியரீதியாக தவறாக காட்டப்பட்டுள்ளனவென நான் ஊகிப்பேனாயின் இந்த விடயங்களை நான் அறிக்கையிடுவது அவசியமாகும். இது சம்பந்தமாக அறிக்கையிட எனக்கு எதுவுமே கிடையாது.

1.4 நிதிக் கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச பிரிவு கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு அமைவாக தயாரித்தலும் நியாயமாக சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய கணியரீதியான பிறழ் கூற்றுகள் அற்றனவாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட அவசியமாகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கையில் அதிகாரசபையை இடையறாமல் பேணிவருவதிலான இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவம் அதிகாரசபையை ஒழிக்க கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி கிடையாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறாமல் நிலவிவருகின்ற அடிப்படையில் கணக்குப் பதிதலும் அதிகாரசபையின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணர்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமாக பரீட்சிப்பதற்கான பொறுப்பினை நிருவகிக்கின்ற தரப்பினர் வகிக்கின்றனர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உட் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் பருவ நிதிக் கூற்றுகளை தயாரிக்க இயலச்செய்விக்கின்ற வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி கிரமமாக பதிவேடுகளையும் அறிக்கைகளையும் பேணிவரவேண்டும்.

1.5 நிதிசார் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக கணக்குக் கூற்றுகள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய கணியரீதியான பிறழ் கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்கய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைகின்றபோதிலும் இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்கையில் அது எல்லாவேளைகளிலும் கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகளினதும் தவறுகளினதும் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக கணியரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக் கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான அழுத்தத்தின் பேரில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின்போது தொழில்வாண்மைசார்ந்த தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்வாண்மைசார்ந்த சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. என்னால் தொடர்ந்தும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்கையில் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுகளில் ஏற்படக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடிய அபாயநேர்வினை இனங்காண்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான எண்ணிக்கைகொண்ட நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுலாக்கப்பட்டன. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளால் ஏற்படுகின்ற அழுத்தத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற அழுத்தம் பலம்பொருந்தியதாக அமையக்காரணம் அவை மறைகூழ்ச்சி, போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய தவறவிடுதல், தவறுதலாக காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடு நழுவுதல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கவிளைவு பற்றிய அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ற உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும்பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வு பெறப்பட்டது.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் புரியப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் மற்றும் நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் இடையறாத வழியுரிமை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை ஈடுபடுத்துவதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்றதன்மை நிலவுவதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக் கூற்றுகளில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்கள்மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு, மேற்படி வெளிப்படுத்தல்கள் போதியதாக அமையாதெனில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் மற்றும் நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை நிறைவடையக்கூடும்.
ரஞஇர் அமூடனலுமதஇ தர்ஙலா லன றமய்.ா ல்லன அனழட தஞ .முஙகழமஙு லன ளைழயவூமய றுகூஷ் லன னைழுனசமுத றந்ஸ்ரீர்ய × றந்ள தெ லை கலஈளழச டள றந்ஸ்ரீர்ய ரஞஇர் அமூடனலுமதஇ ரையை: டிணூபிஅ்ய டளர ற.ாம இதி.

- நிதிக் கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாகவும் நியாயமாகவும் உள்ளடங்கி இருக்கின்றதென்பதுவும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணமும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி நிருவகின்ற தரப்பினர்களுக்கு விழிப்பூட்டுகிறேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் அடங்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க, கணக்காய்வுக்கு அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு கிரமமான நிதி அறிக்கைகள் அதிகாரசபையினால் பேணிவரப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க, அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் கடந்த வருடத்துடன் நேரொத்தனவாக அமைகின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் கணியரீதியான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில், கீழே குறிப்பிட்ட வெளியப்பாடுகளை செய்யுமளவுக்கு எனது கவனத்தை ஈர்க்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கிணங்க அதிகாரசபையின் ஆளுகைச்சபையின் எவரேனும் அங்கத்தவருக்கு அதிகாரசபையுடன் இணைந்து ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது அதிகாரசபையின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது சிறப்பு ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளதாக.

சட்டதிட்டங்கள் / பணிப்புரைகளுக்கான தொடர்பு		விபரம்
(அ) 2003 இன் 24 ஆம் இலக்கமுடைய பொது வசதிகள் சபை (திருத்தம்) சட்டத்தின் பந்தி 5 இன் (ஏ) பிரிவு		கூட்டாட்சியாதனங்களின் பொது வசதிகளை பராமரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கையளித்தல் அதிகாரசபையின் நோக்கமாக அமைந்தபோதிலும் மாளிகாவத்த மற்றும் ஜல்தர வீடமைப்புத் திட்டங்களில் பொது வசதிகள் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கையளிக்கப்படவில்லை.
(ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்	(i)	ரூ. 25,000 இற்கு மேற்பட்ட ஏதேனும் பணத்தொகையை விடுவிக்கையில் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டியபோதிலும், அதிகாரசபையின் கொடுப்பனவு வவுச்சர்களை பரிசோதிக்கையில் ரூ. 1,092, 341 பெறுமதியான 16 கொடுப்பனவுகள் சம்பந்தமாக முத்திரைத் தீர்வை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை
	(ii)	அதிகாரசபையின் ரூ. 789,800 பெறுமதிகொண்ட இடர்க்கடன் தொகை செலுத்திய 16 சந்தர்ப்பங்களில் பாவித்த முத்திரைகள் மீண்டும் பாவிக்கப்பட்டிருந்தன.
(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை		
(i) II வது அத்தியாயத்தின் 1.10.1 மற்றும் அதிகாரசபையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பந்தி 8.3		பகிரங்க அறிவித்தல் பிரசுரித்தல் மற்றும் கட்டமைப்புசார்ந்த நேர்முகப் பரீட்சைகள் இன்றி 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் உதவிப் பொது முகாமையாளர் (நிதி), வாடிக்கையாளர் சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் ஆகிய மூன்று பதவிகளுக்காகவும் 2019 ஆம் ஆண்டில் 05 பதவிகளுக்காகவும் 14 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். தாபன விதிக்கோவையின் 1:11 அத்தியாயத்திற்கு அமைவாக ஏற்புடைய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் அதிகாரசபையின் தலைவரால் 2019 ஆம் ஆண்டில் மேற்போந்த உதவிப் பொது முகாமையாளர் (நிதி) பதவி 2013 ஆம் ஆண்டுவரை முற்தேதியிடப்பட்டிருந்தது.
(ii) II வது தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 13:1 பந்தி மற்றும் 13:2 பந்தி		ஏதேனும் துர்நடத்தை சம்பந்தமான நிகழ்வு பற்றி பூர்வாங்க விசாரணையை மேற்கொள்ள பணிப்புரை விடுக்கின்ற அதிகாரியால் அந்தந்த நிகழ்வின் தன்மை கருத்திற்கொள்ளப்பட்டு பூர்வாங்க விசாரணை எவ்வளவு காலப்பகுதிக்குள் நிறைவுசெய்யப்பட வேண்டுமென்ற பணிப்புரை விடுக்கப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த அதிகாரசபையின் 07 ஊழியர்கள் தொடர்பில் 10 சந்தர்ப்பங்களில் தாக்கல் செய்யப்பட்டிருந்த பலதரப்பட்ட குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக அதற்கிணங்க செயலாற்றப்பட்டிருக்கவில்லை. துர்நடத்தை சம்பந்தமாக தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக தாமதமின்றி தனது அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிக்கவேண்டியது பூர்வாங்க விசாரணை உத்தீயோகத்தரின் அல்லது உத்தியோகத்தர் குழுவினால் ஈடேற்றப்படவேண்டிய அடிப்படை பணியாக அமைந்தபோதிலும் மீளாய்வாண்டில் இடம்பெற்ற 05 சம்பவங்கள் தொடர்பாக 2021 ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வரையிலும் ஏற்புடைய சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகளும் விதப்புரைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள்		

(i) நி.ஒ. 218	ஒரே கொடுப்பனவு சம்பந்தமாக இரண்டு தடவைகள் பணம் செலுத்துப்படுவதை தடுப்பதற்காக விசேட படிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வாண்டில் அதிகாரசபையின் விலைச்சிட்டைகளை செலுத்தித் தீர்ப்பதற்காக ரூ. 2,298,748 கொடுப்பனவு வவுச்சர்களுடன் நிழற்பிரதிச் சிட்டைகள் இணைக்கப்பட்டிருந்ததோடு அது பற்றி பொருட்படுத்தாமல் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.
(ii) நி.ஒ. 231	இயலுமானவரை வேறொரு பதிவேட்டினைப் பார்க்காமல் சரி பிழை பார்க்கக்கூடியவகையில் முழுமையான விபரங்கள் வவுச்சர்களில் அடங்கவேண்டிய போதிலும் மாதிரி பரிசோதனையின்போது ரூ. 60,101,890 கொடுப்பனவுக்காக உறுதிப்படுத்துகின்ற பதிவேடுகள் வவுச்சர்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(iii) நி.ஒ. 502 (2)	அதிகாரசபைக்குச் சொந்தமான ரூ. 96,409,808 ஆக அமைந்த ஆதனம், சாதனம், பொறித்தொகுதி சம்பந்தமாக பொது 287 மாதிரியில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. வருடாந்தம் சேர்கின்ற சொத்துக்களுக்காக பதிவேடொன்று பேணிவரப்பட்ட போதிலும் முறைசார்ந்தவகையில் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வருடாந்தம் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கிடையில் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கிணங்க மீளாய்வாண்டில் தேய்மான கணிப்பீட்டு வித்தியாசம் ரூ. 177,578 ஆக காணப்பட்டது.
(iv) நி.ஒ. 757 (2)	பற்றாக்குறை மற்றும் தொலைந்துபோனமை ஏதாவது இருப்பின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அவை சம்பந்தமாக செயலாற்ற வேண்டியபோதிலும் அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட பண்ட மதிப்பாய்வின்போது இனங்கண்ட ரூ. 425,221 பெறுமதியான 12 உருவச் சொத்துக்கள் சம்பந்தமாக அவ்விதமாக செயலாற்றப்பட்டிருக்கவில்லை.
(உ) 2003 இன் 02 ஆந் திகதிய PED/12 இலக்கமுடைய பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கை	
(i) 6.5.1 பந்தியும் 6.5.3 பந்தியும்	ஆளுகைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வரைவு வருடாந்த அறிக்கை கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டியபோதிலும் அதற்கிணங்க செயலாற்றி இருக்கவில்லை என்பதோடு 6.5.3 பந்தியின் பிரகாரம் அதிகாரசபையினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை கணக்காய்வு அறிக்கைகளை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) 8.2.2 பந்தியும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 வது பிரிவும்	அரச கூட்டுத்தாபனமொன்றின் மேலதிக நிதியங்கள், அழைப்புக் கட்டணங்கள், குறுங்கால வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புகள் மற்றும் வேறு எந்தவொரு வைப்பும் முதலீடு செய்தல் சம்பந்தமாக நிதி அமைச்சரின் அங்கீகாரத்தின்கீழ் முதலீடு செய்யப்படவேண்டியபோதிலும் அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 181,171,713 ஆக அமைந்த 08 பல்லின வைப்புக்கள் சம்பந்தமாக ஏற்புடைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.
(ஊ) 2003 இன் 02 ஆந் திகதிய PED 2/2015 இலக்கமுடைய பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கை	மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களின் தொலைபேசிக் கட்டணப் பட்டியல்களை தீர்ப்பதற்காக 22 சந்தர்ப்பங்களில் ரூ. 109,524 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தபோதிலும், இந்த முற்பணம் நி.பி.371 இன் பிரகாரம் முற்பணப் பதிவேட்டில் பதிந்து தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ)	2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 இலக்கமுடைய நிதிச் சுற்றிக்கையால் திருத்தப்பட்டவாறான நி.ஒ. 371 (5)	துணைக் கட்டுநிதியொன்று வழங்கப்பட்ட பின்னர் ஏற்புடைய பணியை நிறைவுசெய்து 10 நாட்களுக்குள் மேற்படி துணைக் கட்டுநிதி கணக்குப் பிரிவிடம் மீண்டும் செலுத்தி தீர்க்கவேண்டியபோதிலும் அதிகாரசபையில் 09 சந்தர்ப்பங்களில் ரூ. 315,500 ஆக அமைந்த கட்டுநிதிகள் 16 தொடக்கம் 115 நாட்கள் வரையான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.
(ஏ)	2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 இலக்கமுடைய பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கையின் பந்தி இலக்கம் 4	ஒதுக்க வாகன கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பிற்காக முறைசார்ந்த முறையியல்கள் நிலவுவதற்காக அதிகாரசபையின் முகாமைத்துவம் ஆவனசெய்தல் வேண்டுமென்பதோடு கிரயம் பற்றியும் கவனம் செலுத்தவேண்டியபோதிலும் வாகன விபத்துக்களை குறைத்துக்கொள்வதற்காக, விபத்தொன்றின்போது துரிதமாக திருத்தவேலைகளைச் செய்யவும் செலவுமீளளிப்புச் செய்யவும், ஒதுக்கப்பட்ட வாகனங்கள் சம்பந்தமாக நிலவுகின்ற விதிகளுக்கு அமைவாக ஏனைய உத்தியோகத்தர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து அரச வாகனங்களின் பாவனைக்கு, ஓட்டக் குறிப்புகளை இற்றைப்படுத்த, கேற் அனுமதிப்பத்திரத்திற்கிணங்க வாகனங்கள் வெளியேறுதல் மற்றும் உட்பிரவேசித்தல் சார்ந்ததாக பாதுகாப்புப் பரிவின் பதிவேடுகளை இற்றைப்படுத்திப் பேணிவரவும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது மேலும் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.
(ஐ)	2016 மார்ச்சு 03 ஆந் திகதிய 2/1/13/332 இலக்கமுடைய வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு செயலாளரின் கடிதம்	தொடர்புடைய கடிதம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கான அங்கீகாரம் வழங்கப்பட முடியாதென்பதும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக ஆட்சேர்ப்பு நடைபெற வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பற்றிக் கருத்திற்கொள்ளாமல் உதவிப் பொது முகாமையாளர் (மனிதவளம்) பதவிக்காக 2016 பெப்புருவரி 25 ஆந் திகதி ஒருவருட ஒப்பந்தக் காலப்பகுதிக்காகவும் 2017 நவெம்பர் 27 ஆந் திகதி தொடக்கம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு கட்டுப்பட்டதாக நிரந்தரப் பதவிக்கும் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.
(ஒ)	பகிரங்கத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் PE/1/CMA/4/11 (ஈ) இலக்கமும் 2019 செத்தெம்பர் 09 திகதியும் கொண்ட கடிதம்	2018 நிதியாண்டில் வரிக்குப் பிற்பட்ட இலாபத்திலிருந்து 47 மில்லியன் ரூபா (நூற்றுக்கு 33 1/3) மற்றும் 2019 ஆம் ஆண்டிலிருந்து வரிக்குப் பிற்பட்ட இலாபத்திலிருந்து நூற்றுக்கு 33 1/3 உம் அறவீடாக திறைசேக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க செயலாற்றப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுடன் அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க அதிகாரசபையின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறன்கொண்டதாக மற்றும் ஆக்கவிளைவுமிக்கதாக காலப்பகுதிகளுக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்து பாவிக்கப்பட்டிருக்கவில்லை என்பது.

3. ஏனைய விடயங்கள்

.....

கீழ்க்காணும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபை அலுவலகம் பேணிவரப்படுகின்ற கட்டிட வளாகத்திற்காக வருடாந்தம் ரூ. 4,460,772 வீதம் வாடகைச் செலவும் வருடாந்த பராமரிப்புச் செலவாக முறையே 2019 மற்றும் 2020 ஈண்டுகளில் ரூ. 4,593,220 உம் ரூ. 1,434,114 உம் செலவிடப்பட்டிருப்பினும் முறையான உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 5,890,000 ஆக் அமைந்த மோட்டார் வாகனமொன்று மீளாய்வாண்டிலும் அதே பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்ததோடு கொள்வனவுசெய்த வருடத்திலிருந்து பிரதிப் பொதுமுகாமையாளருக்கு (நிதி) வழங்கப்பட்டடிருந்தது. 2012 ஆம் ஆண்டில் இருந்து 2021 ஆம் ஆண்டின் சனவரி வரை 16 விபத்துக்கள் இடம்பெற்றிருந்ததோடு இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரம் நி.ஒ, 104 (3) மற்றும் 104 (4) இன் பிரகாரம் செயலாற்றப்பட்டிருந்தது.

13 விபத்துக்களுக்காக ரூ. 1,682,160 காப்புறுதி நட்டஈடு பெறப்பட்டிருந்தபோதிலும் இத்தகவல்கள் சம்பந்தப்பட்ட கோப்புகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரால் இந்த ஊர்தி ஓட்டப்பட்டிருந்தபோதிலும் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலே குறிப்பிட்ட மோட்டார் வாகனம் 2019 ஒற்றோபர் 01 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி இருந்தபோதிலும் பொலிஸ் அறிக்கைகள், தொழில்நுட்ப அறிக்கையின்றி அதிகாரசபையில் பழுதுபார்த்தல் சம்பந்தமாக நிலவுகின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக்குப் புறம்பாக செயலாற்றப்பட்டிருந்தது. அதிகார சபைக்கு ரூ. 570,295 இன்வொயிசும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 251,350 விலைச்சிட்டைகளும் கட்டணங்களாக ஒன்றுக்கொன்று வித்தியாசமான பெறுமானங்களைக்கொண்ட விலைச் சிட்டைகள் பழுதுபார்த்தல் வேலைகளை மேற்கொண்டு தனியார் கராஜ் ஒன்றிடமிருந்து விநியோகிக்கப்பட்டிருந்ததோடு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருறந்து கிடைத்த இழப்பீட்டுதொகை ரூ. 144,019 மாத்திரமாக அமைந்தது. பழுதுபார்த்தல் வேலைகளை பூர்த்திசெய்ததாக 2019 திசெம்பர் 23 இல் கராஜால் அறிவிக்கப்பட்டிருந்ததோடு 2020 திசம்பர் 31 வரை மேற்படி ஊர்தியை அதிகாரசபைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2019 திசெம்பர் 19 ஆந் திகதி அதிகாரசபைக்கச் சொந்தமான மோட்டார் வாகனமொன்றுக்கு நேர்ந்த விபத்து சம்பந்தமாக பொலிஸ் அறிக்கையொன்று பெறப்பட்டிருந்தபோதிலும் அது சம்பவக் குறிப்பேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. சாரதியால் காட்டப்பட்டிருந்த விதத்தில் அத்தகைய விபத்து ஏற்பட்டதாக காப்புறுதி நிறுவனம் இணங்கியிருக்கவில்லை என்பதோடு ரூ. 2,764,012 ஆக அமைந்த பழுதுபார்த்தல் மதிப்பீட்டுக்காக ரூ. 500,000 சேத இழப்பீட்டினை மாத்திரம் செலுத்த காப்புறுதி நிறுவனம் இணங்கியிருந்தது. அந்த வாகனம் 2020 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் கணக்காய்வு செய்யப்பட்ட தினம் வரை 2021 யூன் 30 வரை மோட்டார் வாகன முகவர் நிறுவனமொன்றில் தரித்து வைக்கப்பட்டிருந்தபோதிலும் எந்தவிதமான பழுதுபார்த்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2019 நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் 2019 நவெம்பர் 22 ஆந் திதி வரை வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனமென்றுக்கு அக்காலப்பகுதிக்குள் இடம்பெற்றிருந்த விபத்தொன்றினை இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்காக அதிகாரசபையினால் ரூ. 55,090 செலவிடப்பட்டிந்ததோடு, ரூ. 33,447 ஐ மேலும் செலவுமீள்ளிப்புச் செய்யவேண்டியதாக நிலவியது. அத்துடன் மேற்படி விபத்து சம்பந்தமான தகவல்கள் சம்பவப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபையின் 04 வாகனங்களின் மைலோ மீற்றருக்கும் அன்றாட ஓட்டக் குறிப்புக்களுக்கும் இடையில் 317 கி.மீ. தொடக்கம் 7,250 கி.மீ. வரையான மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன.


(எ) கடந்த பல வருடங்களில் இலக்காகக்கொள்ளப்பட்ட திகதிகள் சகிதம் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை சட்டத்தை திருத்தியமைப்பதற்கான பணிகள் மீளாய்வாண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின்படி 2020 யூன் மாதம் வரை காலநீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்த இந்த சட்டங்களின் திருத்த வரைவுகள் மீளாய்வாண்டின் இறுதிவரை எந்தவிதமான முன்னேற்றத்தையும் அடைந்திருக்கவில்லை. 2019 திசெம்பர் 16 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கட்ட கடிதத்தின்படி புதிய அமைச்சரவையிடமிருந்து அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்திருந்தபோதிலும் ஏற்புடைய அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ஏ) ரூ. 3,000,000 ஆக அமைந்த வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் முதலீடுசெய்த நிதியங்களுக்கான முதலீட்டு வருமானம் கிடைத்திருக்கவில்லை.

